பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 19 சனிக்கிழமை 03.03.2018 கதிர் 118

காலைக்கதிர் Kalaikkathir
விளம்பர சேகரிப்பாளர் பணிக்கு ஆள்கள் தேவை.
மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள
021 222 2600, 077 311 9298, 075 313 2876

# ரணிலை வீழ்த்த விடாப்பிடி முயற்சி

## ஐ.தே.க. அதிருப்திக் குழு எதிர்க்கட்சிகளுடனும் பேச்சு

கொழும்பு, மார்ச் 03

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்தும் பிரதமர் பதவியில் இருந்தும் அகற்றுவதற்கு ஐ.தே.கவின் அதிருப்தியாளர்கள் குழுவொன்று தீவிரமான முயற்சியில் இறங்கியுள்ளது.

ஐ.தே.கவில் உள்ள பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த அதிருப்தியாளர் குழுவில் உள்ளடங்கியுள்ளனர்.

பிரதமர் ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து அவரைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான முழு முயற்சியில் இறங்கியுள்ள இந்தக் குழுவினர், ஐ.தே.கவுக்குள் மட்டுமல்லாது எதிர்க்கட்சியில் இருந்தும் இதற்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

பக்கம் 18

# ரணிலுக்கு எதிராக வராது பிரேரணை

## யாழ். வந்த அமைச்சர் ஜோன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 03

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் திட்டம் எதுவும் ஐ.தே.கவுக்குள் இல்லை.

இவ்வாறுதெரிவித்தார் அமைச்சர் ஜோன் அமரதுங்க.

பக்கம் 18



## இது ரகசியம் அல்ல!

தமது தமிழ் மக்கள் பேரவையை பரவலாக்கி, பலரையும் உள்வாங்கி, விரிவுபடுத்துவதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுத்த முயற்சி வெளியில் சத்தம் சந்தடியில்லாமலேயே உள்ளே பெரும் களேபரத்தை உண்டு பண்ணி விட்டதாகத் தெரிகின்றது.

பக்கம் 03

# இலங்கைப் படைகளைத் தண்டிக்க தயாராகி வருகின்றது சர்வதேசம்!

## மஹிந்த தரப்பு குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 03

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அழுத்தம் காரணமாகவே காணாமற்போனோர் பணியக உறுப்பினர்கள் தெரிவு அவசரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரை மையப்படுத்தி இலங்கை இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்குச்சர்வதேசம் தயாராகி வருகிறது.

இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார்

பக்கம் 18

# இரும்பு வியாபாரி சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ்ப்பாணம் – கொட்டடிப் பகுதியில் இரும்பகம் ஒன்றை நடத்தி வரும் முதியவர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது உயிரிழப்புக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

(விரிவு 2ஆம் பக்கத்தில்)

# கூட்டணித் தலைவரை தாக்கினாராம் சங்கரி!

## பொலிஸில் முறைப்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 03

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரிக்கு எதிராக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டணியின் புதிய தலைவரான சிவசுப்பிரமணியமே கட்சியின் செயலாளர் நாயகத்துக்கு எதிராக இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர்மட்டக்

பக்கம் 18

# பாடசாலையில் மயங்கிய 15 வயது மாணவி மரணம்!

கொழும்பு, மார்ச் 03

புஸல்லாவை – உடகம அடபோகே பிரதேசத்தில் மாணவி ஒருவர் பாடசாலையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 15 வயதுடைய மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனக் கூறப்பட்டது.

நடனப் பயிற்சி அறை

பக்கம் 18

# ஐ.தே.க. மறுசீரமைப்பு மிகக் கட்டாயமானது!

## கூறுகிறார் ரவீந்திர சமரவீர

கொழும்பு, மார்ச் 03

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பாரிய மறுசீரமைப்பொன்று மேற்கொள்ளவேண்டிய கட்டாயநிலை உருவாகியுள்ளது என வனஜீவராசிகள் மற்றும் நிலையான அபிவிருத்தி அமைச்சர் ரவீந்திர

பக்கம் 18

# பஸ்ஸில் குண்டுவெடிப்பு; படை அதிகாரி மறியலில்

கொழும்பு, மார்ச் 03

தியத்தலாவை – கஹாகொல்ல பிரதேசத்தில் தனியார் பஸ் ஒன்றில் கைக்குண்டு வெடித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இராணுவ மின்பொறியியல் அதிகாரி எம்.எம்.ஜே.எல்.கே. சந்திரசேனவை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை

பக்கம் 18

# சிரிய மக்களுக்காக முள்ளிவாய்க்காலில் இன்று கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, மார்ச் 03

சிரியாவில் தொடரும் மனிதப் படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்தும் அவற்றை நிறுத்த ஐ.நா. விரைந்து செயற்படவலியுறுத்தியும் முள்ளிவாய்க்காலில் இன்று சனிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான அழைப்பை

பக்கம் 18

# வடக்கு – கிழக்கில் முதலீடு செய்ய புலம்பெயர் தமிழரே வாருங்கள்!

## நல்லாட்சி அரசு பகிரங்க அழைப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 03

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர் தமிழர்கள் உண்மையிலேயே அக்கறை உள்ளவர்கள் என்றால், வடக்கு – கிழக்கில் முதலீடுகளைச் செய்ய அவர்கள் முன்வரவேண்

பக்கம் 18

## சிங்கப்பூர் சென்றிருந்தவேளை

# மகேந்திரனின் மனைவியை சந்தித்தாரா பிரதமர் ரணில்?

கொழும்பு, மார்ச் 03

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் உத்தியோகபூர்வப் பயணமாகச் சிங்கப்பூர் சென்றார். அங்கு அவர் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் மனைவியைச் சந்தித்துள்ளார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸுக்குப் பிணை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே அவர் பிரதமரைச் சந்தித்துள்ளார் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில், சிங்கப்பூர் சென்றடைந்தவுடன் அர்ஜுன் மகேந்திரனின் மனைவி பல முறை அழைப்பேற்படுத்தி எப்படியாவது ரணிலைச் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு கோரியுள்ளார். இதனை அடுத்து பிரதமரைச் சந்தித்த அவர், தனது மருமகனுக்கு

பக்கம் 18

காலைக்கதிர்
Kalaikkathir



# வவுனியாவில் புதையல் தோண்டிய மூவர் கைது; மூவர் தப்பி ஓட்டம்

வவுனியா, மார்ச் 03

வவுனியா, சாம்பல் தோட்டம் பகுதியில் புதையல் தோண்டிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் மூவர் தப்பி ஓடியுள்ளனர் என நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா நெளுக்குளம் பொலிஸாருக்கு இரவு 9.30 மணியளவில் சாம்பல் தோட்டம் பகுதியில் புதையல் தோண்டுவதாக கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ. எம். அத்தநாயக்க தலைமையில் சென்ற குழுவினர் சாம்பல் தோட்டம் மைதானப்பகுதி ஒன்றில் புதையல் தோண்டிய மூவரைக்கைது செய்துள்ளனர்.

இதன்போது அங்கிருந்த மேலும் மூவர் தப்பி ஓடியுள்ளனர்.

இதையடுத்து கைது செய்யப்பட்டவர்கள்வவுனியாபொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தப்பி ஓடிய மூவரையும் பொலிஸார் தீவிரமாக தேடிவருகின்றனர் என்றும் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய மண்வெட்டிகள், அலவாங்கு, பிக்கான் என்பனவற்றையும் மீட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்கள் கூமாங்குளம் பகுதியைச்சேர்ந்த 23, 32 வயதுடைய இருவரும் நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 23வயதுடைய ஒருவரும் ஆவார். (க-100)

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மன்னாரில் கையெழுத்துப் போராட்டம்!





மன்னார், மார்ச் 03

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மன்னாரில் நேற்று கையெழுத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 37 ஆவது கூட்டத் தொடர் ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றது.


இந்தநிலையில், இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், சர்வதேசபொறுப்புக்கூறல்பொறிமுறையை வலியுறுத்தியும், நேற்றுக் காலை மன்னாரில் கையெழுத்து போராட்டம் இடம்பெற்றது.

சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில், வடக்கு, கிழக்கில் இடம்பெற்று வருகின்ற கையெழுத்து போராட்டம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் மன்னார் பஸார் பகுதியில் சர்வதேசபொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழுவின் மாவட்ட ஏற்பாட்டு குழு தலைவர் அந்தோனி சகாயம் தலைமையில் இந்தக் கையெழுத்து போராட்டம் ஆரம்பமானது.

இதன் போது காணாமல்போன, கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், பொது மக்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத் தொடர் ஜெனீவாவில் நடைபெற்று வருகின்ற நிலையில், இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறையை வலியுறுத்தியும் கையெழுத்துக்களை பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-112)

# லலித் வீரதுங்கவுக்கு விதிக்கப்பட்ட தடை நீதிமன்றத்தால் தற்காலிகமாக நீக்கம்



கொழும்பு, மார்ச் 03

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க வெளிநாடு செல்வதற்காக விதிக்கப்பட்டிருந்த தடை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

லலித் வீரதுங்கவால் முன்வைக்கப்பட்ட மறு பரிசீலனை மனு நேற்று பிரித்தி பத்மநாதன், சூரசேன மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது லலித் வீரதுங்கவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தனது கட்சிதாரருக்கு கடமை மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக ஆஸ்திரேலியா மற்றும் கட்டார் நாடுகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, வெளிநாடு செல்வதற்காக விதிக்கப்பட்டுள்ள தடையை மார்ச் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் தற்காலிகமாக நீக்குமாறு அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த வேண்டுகோளை ஏற்ற நீதிமன்றம் லலித் வீரதுங்க வெளிநாடு செல்வதற்காக விதிக்கப்பட்ட தடையை தற்காலிகமாக நீக்கியுள்ளது.

# யாழ். நகர்ப் பகுதியில் ஆணின் சடலம் மீட்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ். கொட்டடி பகுதியில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரும்புக் கடை உரிமையாளரான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 69 வயதான சிலுவைராசா என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் அவரது கடைக்கு பின்புறமிருந்து மீட்கப்பட்டுள்ளது ன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்தச் சம்பவம் கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# எதிரணிக்குச் செல்ல தயாராகிறார் புஞ்சிநிலமே!



கொழும்பு, மார்ச் 03

கூட்டு அரசில் இருந்து விலகி, எதிரணியில் அமர்ந்து கொள்வதற்கு, பொது முகாமைத்துவ பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அனுமதி கோரியுள்ளார்.

தமது நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் விளக்கிக் கூறியுள்ளார் என்றும், எனினும், ஒரு மாதம் பொறுத்திருக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார் என்றும், புஞ்சிநிலமே தெரிவித்துள்ளார்.

தமது தொகுதி மக்களின் விருப்பத்துக்கேற்ப செயற்பட வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுசந்த புஞ்சிநிலமே திருகோணமலை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாதரவத்தைக்கான போக்குவரத்து சேவை குறித்து அதிகாரிகளுடன் அமைச்சர் அனந்தி ஆலோசனை

யாழ். புத்தூர் பகுதியில் உள்ள வாதரவத்தை கிராமத்திற்கான அரச போக்குவரத்து சேவையினை தொடங்குவது குறித்து வட மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தொடர்புடைய அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தியுள்ளார்.

நீண்ட காலமாக போக்குவரத்து வசதியின்றி சிரமப்பட்டு வரும் வாதரவத்தை மக்களின் கோரிக்கை தொடர்பில் அமைச்சர் அனந்தி சசிதரன் இலங்கை போக்குவரத்து சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான பி.டி.பாலசூரியவுடன் தொலைபேசியில் கலந்துரையாடியுள்ளார்.

இதனையடுத்து பிரதம நிறைவேற்றுஅதிகாரியின்பணிப்பின்பேரில் இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய செயற்பாட்டுமுகாமையாளர் கேதீஸ் நேற்று அமைச்சர் அலுவலகத்திற்கு நேரில் சென்று அமைச்சருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதன் போது, வாதர வத்தை – யாழ்ப்பாணம் வழித்தடத்தில் பஸ் சேவையினை நடத்துவதில் உள்ள நடைமுறைப்பிரச்சினைகள் குறித்து அமைச்சருக்கு செயற்பாட்டு முகாமையாளர் விளக்கமளித்திருந்தார்.



இந்தப் பிரச்சினைகளுக்கு தொடர்புடைய அதிகாரிகளுடன் ஆலோசித்து உரிய தீர்வினை காண்பதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் அதன் பின்னர் விரைவாகவே சீரான போக்குவரத்துச் சேவையினை ஆரம்பிப்பது எனவும் ஆலோசனையின் இறுதியில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் அனந்தி சசிதரனின், மாகாண சபை உறுப்பினர்களுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதி 20 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புற்பாய்நெசவு நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றிருந்த போது இந்தப் பகுதி மக்களால் இப்போக்குவரத்துச் சேவைக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அகதிகள் விடயத்தில் மாற்றுத் திட்டம் ஏதுமேயில்லை

## ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம் உறுதி

கான்பரா, மார்ச் 03

அமெரிக்காவின் குடியேற்றத் திட்டம் நிறைவேற்றப்படும் வரை, இலங்கை உட்பட்டநாடுகளின் அகதிகளைக் குடியேற்றும் விடயம் தொடர்பில் எந்த மாற்றுத் திட்டத்தையும் முன்வைக்கப் போவதில்லை என ஆஸ்திரேலியாவின் பிரதமர் மல்கம் டேர்ன்புல் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் உள்ள அகதிகளில் ஆயிரத்து 250 பேரைத் தமது நாட்டில் குடியேற்றுவதற்கு அமெரிக்க அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரையில் 200 பேர் அங்கு குடியேற்றப்பட்டுள்ளனர்.எனவே இந்தத் திட்டம் நிறைவடையும் வரை ஆஸ்திரேலியாவின் பாதுகாப்பில் உள்ள அகதிகள்குறித்த மாற்றுத் திட்டங்கள் வகுக்கப்பட மாட்டாது என்று அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், படகு மூலம் அஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கின்ற அகதிகளை குடியேற்றுவதில்லை என்றகொள்கையை ஆஸ்திரேலியா பின்பற்றுகிறது.

அத்துடன் நியூசிலாந்து அரசு 150 அகதிகளைப் பொறுப்பேற்றுக் கொள்வதாக வழங்கிய வாய்ப்பையும் ஆஸ்திரேலியப் பிரதமர் மறுத்துள்ளார். (ஐ)

# சிங்கப்பூர் வர்த்தக அமைச்சரை சந்தித்துப் பேசிய பிரதமர் ரணில்



சிங்கப்பூர் சிட்டி, மார்ச் 03

சிங்கப்பூருக்கும் இலங்கைக்குமான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையில் முதலீடு செய்வதற்குப் பல முதலீட்டாளர்கள் தயாராகியுள்ளமையைக் கருத்திற்கொண்டு அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான துரித ஏற்பாடுகளை முன்னெடுப்பது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிங்கப்பூர் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் எஸ். ஈஸ்வரனுக்கும் இடையிலான சந்திப்பின்போது விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

கொழும்புப் பங்குச் சந்தையின் ஏற்பாட்டில் நடக்கும் இன்வஸ்ட் ஸ்ரீலங்கா மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிங்கப்பூர் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை போசீசன்ஸ்ஹோட்டலில்வைத்துச் சிங்கப்பூர் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் எஸ். ஈஸ்வரனை சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை - சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கிடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்குப் பெரும் முயற்சிகளைமேற்கொண்டமைக்குசிங்கப்பூர் அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரு நாடுகளுக்கிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையில் முதலீடு செய்வதற்கு சிங்கப்பூர் முதலீட்டாளர் பலரும் தயாராக உள்ளமையினால், அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான செயற்பாடுகளைத் துரிதமாக முன்னெடுப்பது தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது விசேட அவதானம் செலுத்தப்பட்டமை குறிப்பிடதக்கது. (ஐ)

# ரணிலின் சிங்கப்பூர் பயணம் தொடர்பில் பெரும் சந்தேகம்

## கூறுகிறது சிங்கள ராவய

கொழும்பு, மார்ச் 03

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கப்பூர் பயணம் தொடர்பில் தனக்குச் சந்தேகம் இருப்பதாகச் சிங்கள ராவய அமைப்பின் தேசிய அமைப்பாளர் மாகல் கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

மத்திய வங்கிப் பிணை முறிச் சந்தேகநபர் அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூரில் தங்கியுள்ள இடம் தொடர்பில் பிரதமரின் விஜயத்தின் பின்னர் புலனாய்வுத் துறைக்குத் தகவல்கள் கிடைக்கும் எனவும் தேரர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கிப் பிணை முறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படும் விதம் தொடர்பில் நாட்டு ஞமக்கள் மிகவும் அவதானத்துடன் இருப்பதாகவும் தேரர் கூறினார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

தமிழ் மக்கள் பேரவைக்குள் புதிய வளவாளர்களை - செயற்பாட்டாளர்களை - உள்கொண்டு வரும் முதல்வரின் முடிவால், இதுவரை பேரவைக்குள் இயங்கிய சிலர் பெரும் விசனம் அடைந்திருக்கின்றனர் என்று தெரிகின்றது. எல்லாம் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் மற்றும் காழ்ப்புணர்வுகளால் வந்த வினை.

முன்னுக்கு வந்த காதை பின்னுக்கு வந்த கொம்பு மறைத்த கதை மாதிரி புதிதாகப் பேரவைக்குள் வருவோர் எங்கே தங்களை முந்திக் கொண்டு முன்னேறி விடுவார்களோ என்ற காய்ச்சல் தான் எல்லாவற்றுக்கும் பிரதான காரணம்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் சைக்கிள்காரார்கள் ஒட்டுமொத்தமாக மிஸ்ஸிங். அவர்களும் முதல்வரும் agree to disagree என்ற நிலைமை என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தங்களின் தேர்தல் முயற்சிக்கு முதல்வர் ஒத்துழைக்க மறுத்துவிட்டார் என்ற காய்ச்சல் சைக்கிள்காரருக்கு. பிரசாரத்துக்குத் தமது பெயரையோ, படத்தையோ பாவிக்கக்கூடாது என்றெல்லாம் அடம்பிடித்து, விலகி நின்ற முதல்வர், தேர்தல் முடிவு சற்றுச் சாதகமாக வந்ததும் அதற்கு மட்டும் உரிமை கோரப் பார்க்கின்றார் என சில தரப்புகளிடம் அவர்கள் முணுமுணுத்தனர் என்று கேள்வி. 'தமிழ் மக்கள் பேரவை' என்ற பெயர் தொனிக்கத்தக்க வகையில் 'தமிழ்த் தேசியப் பேரவை' என்ற பதத்தை சைக்கிள்காரர் பாவித்தமை தவறு என்றும், அதனை இனிமேல் பாவிக்கக்கூடாது என்றும் சைக்கிள்காரர்களிடம் நேரடியாக முதல்வர் 'அன்புக் கட்டளை' போட்டார் என்றும் கேள்வி.

அதேசமயம், கடந்த தேர்தலில் எதிர்பாராமல் கணிசமான வெற்றியை ஈட்டிய சைக்கிள்காரர்கள், அந்தத் தலைக்கனத்தில், *'எங்களை விட்டால் முதல்வர் சேர்ந்து செயற்படுவதற்கு வேறு கட்சிகள் கிடையாது. ஆகவே முதல்வர் எங்கள் கட்சியில் வந்து இணைந்து செயற்படவேண்டும்.'* - என்று பகிரங்கமாகக் கூறியமை தனித்தண்டவாளம் அமைத்து, அதில்தானே ரயில் ஓடவிட வேண்டும் என்பது போல தனிக் கட்சி அமைத்து அரசியல் வரலாறு படைக்கும் முனைப்பில் - நினைப்பில் - இருக்கும் முதல்வரையும் சீண்டி விட்டதாகத் தெரிகின்றது. அந்தச் சீற்றத்தில்தான், தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சி அல்ல, அல்ல என்று கூறியபடியே தனித்து அரசியல் கட்டமைப்புக்கு அவர் அத்திவாரம் போடும் வேலையை ஆரம்பித்திருக்கின்றார் என்பது இடையே அறிந்த செய்தி.

தமிழ் மக்கள் பேரவைக்காக இயங்கிய அலுவலக பெண் பணியாளர் ஒருவரைத் தேர்தல் சமயத்தில் சைக்கிள் தரப்பின் அரசியல் தொடர்பான எழுத்துப் பணிகளுக்குப் பயன்படுத்தினர் என்பது உட்பட பல விடயங்களை அறிந்து முதல் வரும் விசனமுற்றிருக்கின்றார் எனத் தெரிகின்றது.

பேரவையுடன் இணைந்து செயற்பட முன்வந்த அரசியல் கட்சிகள், உள்ளூராட்சித் தேர்தலில் கூட பேரவைக்கு வெளியில் ஒன்றுபடவில்லை. குறைந்த பட்ச இணைக்கப்பாட்டுக்குத் தன்னும் வரவில்லை. ஒன்றையொன்று எதிர்த்து, ஒன்று மற்றதின் காலை வாரியமைதான் மிச்சம். ஆகவே, இந்தக் கட்சிகளை விடுத்துத் தனக்கென்று தனிப்பாதை அமைத்துச் செயற்படுவதே உசிதமானது என முதல்வர் தீர்மானித்துச் செயற்படத் தொடங்கிவிட்டார்.

அதற்காக அவர் அருந்தவபாலன், அனந்தி சசிதரன், ஐங்கரநேசன் போன்றோரையும் வேறு சிலரையும் பேரவைக்குள் உள்வாங்கி தன்னைப் பலப்படுத்தும் திட்டத்தை முன்னெடுத்தார். ஆனால் தமக்கு விரும்பாத பலரை முதல்வர் உள்ளே கொண்டு வருகின்றமையை அவருக்கு நெருங்கிய சில தரப்புகள் முட்டுக்கட்டை போட்டு முடக்கிவிட்டன என்றும் தகவல்.

எனினும், அரசியலில் ஆள்களையும் வாக்குகளையும் திரட்டும் வலிமை மிக்கவர்கள் என்று கருதப்படும் மேற்படி மூவரையும் ஒற்றைக்காலில் நின்று - தம் மிஷ்டப்படி - பேரவைக்குள் இழுத்து வந்துவிட்டார் முதல்வர்.

ஆனால், அந்த மூவரைக் கொண்டு வந்தமையால், ஏற்கனவே பேரவையின் சுக்கானைத் தாங்கள்தான் பிடித்திருக்கின்றார்கள் என்று தங்களைத் தாங்களே கருதிக் கொண்டு திரியும் சிலருக்குக் கடும்கோபம். அதன் பிரதிபலிப்பு பல மட்டங்களில் வெளிப்பட்டன.

நேற்றுமுன்தினம் பேரவைக் கூட்டத்தில் இணைத் தலைவர் என்ற முறையில் முதல்வர் ஆற்றிய உரையில் முக்கியமான விடயம் தாம் கூட்டத்துக்கு அழைத்திருந்த - மேற்படி மூன்று பேர் குறித்து - அவர் சிலாகித்துக் கூறிய கருத்துகள்தாம்.

*"அனந்தி, அருந்தவபாலன், ஐங்கரநேசன் இங்கே வந்துள்ளனர். அவர்களும் எமக்கு உதவ முடியும்."* - என்று தொடங்கி மூவரைப் பற்றியும் ஒவ்வொரு பந்தியில் விவரித்து, சிலாகித்து, மெச்சி, பாராட்டி, கருத்துக் கூறினார் முதல்வர்.

ஆனால், தமிழ் மக்கள் பேரவை விடயத்தில் முதல்வரின் ஊதுகுழல் போல தன்னைக் காட்டிக் கொண்ட தினசரி மட்டும், முதல்வரின் முழுப் பேச்சையும் பிரசுரித்து விட்டு, அதில் அந்த மூவர் பற்றிய விடயங்களை மட்டும் கத்திரித்து விழுங்கிக் கொண்டது. அதற்கும் காரணம் இப்பத்தியில் நாம் முன்னர் குறிப்பிட்ட காழ்ப்புணர்சிதான்.

இளைஞர்களை மட்டுமல்ல, அதற்கு அப்பாய் திறமைசாலிகளை, பல்துறை சார்ந்தோரை, இந்த மண்ணோடும் மக்களோடும் நீங்காப்பற்றுடன் நின்றோரை, நேர்மையானவர்களை, கற்றோரையும், பாமரரையும் இணைத்துக் கொண்டால் தான் முதல்வரின் முயற்சி வெற்றி பெறும்.

ஆனால், அவரைச் சூழ்ந்திருக்கும், குறுகிய எண்ணமும் அரசியல் சுயநலமும் காழ்ப்புணர்வும் கொண்டோர் அதற்கு இடமளிப்பரா, அவர்களை மீறி முதல்வர் பரந்தளவில் செயற்படுவரா என்பதெல்லாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டியவை தான். - மின்னல் -

# முல்லைத்தீவில் பெண்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

முல்லைத்தீவு, மார்ச் 03

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை 3.30 மணியளவில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள சுனாமி நினைவாலய வளாகத்தில் நடைபெற்றது.

இதற்கான ஏற்பாட்டினை வன்னிக் குறோஸ் பெண்கள் அமைப்பு செய்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சர்வதேசப் பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகளை வன்னிக் குறோஸ் நிறுவனத்தின் பெண்கள் அமைப்பு ஊடாக முன்னெடுக்கும் முகமாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் கரைதுறைப்பற்று ,புதுக்குடியிருப்பு ,ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டு, கிராமங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இந்த நிகழ்வில் பெண்கள் தொடர்பான கருத்துக்களை வடமாகாணப் பெண்கள் பேரவை இணைப்பாளரும், பெண்கள் தொடர்பான செயற்பாட்டாளரும், பருத்தித்துறையின் முன்னாள் நகரசபை உறுப்பினருமான திருமதி மதினி நெல்சனும், வடமாகாண பெண்கள் பேரவை இணைப்பாளர் தீபா சிறீதரன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவமோகன் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர். (ஐ)

# முதல் முறையாக தமிழ்மொழி மூலம் முதலுதவிப் பயிற்சி

யாழ். முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள சென்.ஜோன் அம்புலன்ஸ் பயிற்சி நிலையத்தில் இன்று காலை 8.45 மணியளவில் இலங்கையில் தமிழ்மொழி மூலமாக முதல் முறையாக முதலுதவிப் பயிற்சி வடமாகாணத்தில் நடைபெறவுள்ளது.

சென்.ஜோன் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத்தின் ஆணையாளர் இந்தப் பயிற்சி நெறியை ஆரம்பித்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து சென்.ஜோன் அம்புலன்ஸ் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், சென்.ஜோன் அம்புலன்ஸ் உத்தியோகத்தர்கள் பங்குபற்றவுள்ளனர். (இ)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

பைவர் கிளாஸ் மோல்ட், பைவர் கிளாஸ் உற்பத்தி, றபர் மோல்ட் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான உள்ளக, வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும்.

108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## காணாமல் போனோர் அலுவலகம் காணாமல் போகாமலிருந்தால் சரி

காணாமல்போனோர் பணியகத்துக்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை, முக்கியமானதொரு நகர்வு என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்திருக்கின்றார்.

மேற்படி காணாமல்போனோர் பணியகத்துக்கான தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மைத்திரி பாலா சிறிசேன நேற்றுமுன்தினம் நியமனக் கடிதங்களை வழங்கியமையை ஒட்டியே இந்தக் கருத்தை அமெரிக்கத் தூதுவர் வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இப்படிப் பல 'ஏட்டுச் சுரக்காய்களை' அவர்கள் கண்டவர்கள். அவை கறிக்கு உதவா.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்திலிருந்து இது போன்ற பல விடயங்கள் ஏட்டுச் சுரைக்காய்கள் போல கண்டு சலித்துப் போன தமிழர்களுக்கு இந்தக் காணாமல் போனோர் பணியகமும் ஓர் ஏட்டுச் சுரைக்காய்தான் என்பது இப்போதே மனதில் சந்தேகமாகப் படிந்துள்ளது.

காணாமல்போனோர் பணியகத்தை உருவாக்குதற்கான சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றி ஆண்டு கடந்துவிட்டது.

ஆனால், இதுவரை அந்த விடயம் கிடப்பில் போடப்பட்டதாக - கிணற்றில் போடப்பட்ட கல்லாக - இருந்து வந்தது. இப்போதுதான் திடீரென மளமளவெனக் காரியங்கள் நடந்தேறுகின்றன. அப்படி நடப்பதன் உட்சூக்குமம் யாது?

எல்லாவற்றுக்கும் ஒரே காரணம்தான் உண்டு. அது- இப்போது ஜெனீவாவில் ஆரம்பமாகியிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 37 ஆவது கூட்டத் தொடர்தான்.

இந்தத் தொடரின் போது, இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் போன்றவை குறித்து கண்டறிவது தொடர்பில் 2015 இல் இலங்கையும் சேர்ந்து, அனுச ரணை வகித்து நிறைவேற்றிய தீர்மானம் பற்றிய விடயம் பரிசீலனைக்கு வருகின்றது. அவ்விடயத்தில் இதுவரை காத்திரமான - உருப்படியான - கணிசமான - எதனையும் ஆற்றாது, சுமார் மூன்றாண்டுகளை இழுத்தடித்து விட்ட இலங்கை அரசு, இப்போது சர்வதேச சமூகத்துக்கு நடிப்புக் காட்டுவதற்காக இந்தக் காணமல்போனோர் அலுவலக விடயத்தைக் கையில் எடுத்திருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த பகிரங்க இரகசியம்.

இந்தக் காணாமல்போனோர் பணியகத்துக்கான ஆணையர்களை நியமிக்கும் விடயத்தை இவ்வளவு காலமும் இழுத்தடித்துவிட்டு, ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர் ஆரம்பமானதும் அங்கு விடயங்களைக் சமாளிப்பதற்காக, ஆணையாளர்களை நியமிக்கின்றார் ஜனாதிபதி என்று பம்மாத்துக் காட்டுகின்றது இலங்கைத் தரப்பு.

இவ்விடயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் -

*"வலுவான, சுதந்திரமான, காணாமல்போனோர் பணியகத்தின் உருவாக்கமானது, இலங்கையின் அனைத்து மக்களும் - குறிப்பாக தமது அன்புக்குரியவர்கள் தொடர்பான பதிலைத் தேடுகின்ற மக்களுக்கு - நிலையான அமைதி, மீள நிகழாமை, பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணத்துக்கு ஒரு முக்கியமான நகர்வாகும்"* - என்று கூறியிருக்கின்றார்.

அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டுகின்றமை மாதிரி இந்தப் பணியகம் வலுவானதாக, சுதந்திரமானதாக இயங்குமா என்பதே கேள்விக்குரியதாகும்.

இந்தப் பணியகம் இயங்குவதற்காகத் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பது வாஸ்தவம்தான்.

ஆனால், இதன் செயற்பாட்டு ஆணை யாது, அதன் செயலாக்கப் பரப்பெல்லை எவை என்பதுதான் பிரதான கேள்விகளாகும்.

இந்த அலுவலகம், யுத்தத்தின் இறுதித் கட்டத்தில் காணாமல் போனோர் தொடர்பில் விடயங்களை - வாக்கு மூலங்களை - சாட்சியங்களை - வெறுமனே பதிவு செய்துவிட்டு, அவற்றின் அடிப்படையில் காணாமல்போனோருக்கான மரணச் சான்றிதழ்களையும் - கொஞ்சம் அதற்கு மேல்போனால் போதுமான இழப்பீடுகளையும் - பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை எடுக்கின்ற அமைப்பாக மட்டும் அமையப் போகின்றதா? அல்லது அதையும் தாண்டி உண்மைகளைக் கண்டறிந்து, தவறிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்தி, பொறுப்புக் கூறலை அர்த்தப்படுத்தும் விதத்தில் செயற்படுத்துவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளைத் தன்னும் முன்னெடுக்குமா?

முதலாவது பணியைத்தான் இந்த அலுவலகம் செய்யுமாயின், இந்த விவகாரம் தமிழரைப் பொறுத்தவரை வெறும் ஏட்டுச் சுரக்காய்தான்.

சர்வதேசப் பங்களிப்புடனான பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கு, வழியேற்படுத்திக் கொடுக்கும் ஒரு கட்டமைப்பாக இது செயற்படுமானால், அதில் சிறிதளவேனும் தமிழர்கள் நம்பிக்கை வைக்க முடியும்.

ஆனால், தென்னிலங்கை அரசியல் கள நிலைவரங்களை நோக்குகின்றபோது, எந்த நகர்வும் பொறுப்புக் கூறல் என்ற விடயப் பரப்பை எட்டுமானால், அது முட்டிமோதி முடக்கப்பட்டு வீழ்த்தப்படும் என்பதே கள யதார்த்தமாக உள்ளது.

இந்தக் காணாமல்போனோர் அலுவலகமும் பொறுப்புக் கூறல் என்ற விடயப் பரப்பைத் தொடுமானல் அதுவும் காணாமல் போவது தவிர்க்க முடியாததாகி விடலாம்.

## ஐ.நாவின் சிறப்புத் தூதுவர் முகமாலைக்கு வருகிறார்

கொழும்பு, மார்ச் 03

ஆள்களுக்குஎதிரானகண்ணிவெடிகளைத் தடை செய்யும் பிரகடனம் தொடர்பான ஐ.நாவின் சிறப்புத் தூதுவரான இளவரசர் மிரெட் ராட்சையிட் அல் ஹுசேன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நாளை 4 ஆம் திகதி தொடக்கம், 7ஆம் திகதி வரை இவர் இலங்கையில் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் சிறப்புத் தூதுவரான இளவரசர் மிரெட் ராட்சையிட் அல் ஹுசேன் இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும், பாதுகாப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுக்களின் செயலர்கள், இராணுவத் தளபதி மற்றும் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்குப் பொறுப்பானஅதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

அத்துடன் எதிர்வரும் 6 ஆம் திகதி, கண்ணிவெடிகளை அகற்றும்பணிகள்இடம்பெறும் முகமாலைக்கும் செல்லவுள்ளார்.



## 65 வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள் ஒரே ஆண்டில் கொழும்பு வந்தன

### கூட்டுப்படைகளின் தளபதி தகவல்

கொழும்பு, மார்ச் 03

இலங்கையில் சீன கடற்படைக் கப்பல்களின் பிரசன்னம் அதிகமாக இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டை கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜே குணரத்ன நிராகரித்துள்ளார்.

புதுடில்லியில் கடந்த புதன் கிழமை இந்திய கடற்படையின் ஏற்பாட்டில், நடந்த இந்தோ - பசிபிக் பிராந்திய கலந்துரையாடலில், உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

கொழும்புத் துறைமுகத்துக்கு சீனக்கடற்படையின்போர்க் கப்பல்களின் வருகை அதிகளவில் இடம்பெறவில்லை.

கடந்த ஆண்டில் 14 நாடுகளின் 65 போர்க்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தந்தன.

இதில் பெருமளவு இந்தியக் கடற்படை மற்றும் இந்தியக் கடலோரக் காவல் படையினுடையவைதான். இந்தியாவின் 22 போர்க்கப்பல்கள் கடந்த ஆண்டு கொழும்புத் துறைமுகத்துக்கு வந்தன என்றும் அவர் கூறியுள்ளார்.

## கிறிஸ்தவ விவகார அமைச்சருடன் யாழ். பல்கலை. பணியாளர் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 03

ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறி ஆரம்ப நிகழ்வுக்காக நேற்று யாழ். பல் கலைக் கழகத்துக்கு வருகைதந்த சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த யாழ். பல்கலைக் கழக பணியாளர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ, வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பல்கலைக் கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப்பேசிய அமைச்சர் ஜோன் அமரதுங்க, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பணியாளர்களையும் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, பல்கலைக்கழக ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக உயர்கல்வி அமைச்சரிடம் எடுத்துச் சொல்லித் தீர்வு பெற்றுத்தருவேன் என உறுதியளித்ததுடன், தன் மீது நம்பிக்கை வைத்து, பணிக்குத் திரும்புமாறு ஊழியர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அமைச்சரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டாலும், பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கக் கூட்டமைப்பு நாடளாவிய ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதனால், அந்தப் போராட்டம் முடிவுறுத்தப்படும் வரை தம்மால் போராட்டத்தைக் கைவிட முடியாது என அமைச்சரிடம் ஊழியர்கள் தெரிவித்தனர்.

## வடக்கு, கிழக்கில் இடம்பெறும் தொல்பொருள் ஆய்வுகள்!

தொல்பொருள் பெறுமதி மிக்க பழைமை வாய்ந்த சிற்பங்கள், கட்டடங்களை அடையாளம் காண்பதற்காக மாவட்ட மட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தொல்பொருள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் பி.பீ.மண்டாவள தெரிவித்துள்ளார்.



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் இவ்வாறானவற்றை அடையாளம் கண்டறிவதற்கு தொல்பொருள் திணைக்களத்தினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதற்கான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 1818 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் திகதிக்கு முன்னரான தொல்பொருள் சட்டத்திற்கு அமைவாக அடையாளம் காணப்பட்டுள்ள தொல்பொருள் பெறுமதி கொண்ட இவ்வாறானவை தொல்பொருள்கள் என்று அடையாளப்படுத்தப்படுகின்றன என்றும் பேராசிரியர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஆய்வுகள் மூலம் கண்டறியப்படும் தொல்பொருள் 100 வருடங்களையும் பார்க்க பழைமையானவையாகக் கருதப்படும் பட்சத்தில் அவற்றை தொல்பொருள் திணைக்களம் வர்த்தமானியின் மூலம் அறிவிக்கும்.

இதற்காகப் பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்புடன் நில அளவையாளர் திணைக்களம் நில அளவைகளை மேற்கொள்ளும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு குறிப்பிட்ட காலம் செல்லும்.

இலங்கையில் இவ்வாறான தொல்பொருள் பெறுமதிமிக்க சிற்பங்கள், கட்டடங்கள் உள்ளிட்டவை சுமார் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் இருக்கின்றன என மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்பொழுது திணைக்களத்தால் இவ்வாறானவை சுமார் மூவாயிரத்து 500 பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(கு)

### நாளை

04.03.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : அத்தம் மு.இ 10.49 வரை
திதி: திருதியை பி.இ 3.59 வரை
சுபநேரம் : 9.26 – 10.56 வரை
இராகுகாலம் : 4.56 – 6.26 வரை

# மக்களை வீதிக்கு இறக்கி நல்லாட்சி அரசை விட்டுக்கு அனுப்பும் போராட்டம் நுகேகொடையில்

கொழும்பு, மார்ச் 03

தேசிய அரசைவீட்டுக்கனுப்பும் வேலைத் திட்டத்தின் இரண்டாம் அத்தியாயம் எதிர்வரும் ஏழாம் திகதி நுகேகொடையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதனைத்தொடர்ந்து நாடு தழுவிய ரீதியில் மக்களை வீதிக்கிறக்கி பேரணி நடத்தவுள்ளோம். ஆகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு முதுகெலும்பிருக்குமாயின் நுகேகொடை பேரணியில் கலந்துகொள்ள வேண் டும்.

அதுவே, அவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பமாக அமையும் என கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அழுத்கமகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பத்தரமுல்லையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண் டும் எனவும் அதனைத் தொடர்ந்து புதிய அரசு நியமிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டு வந்தோம்.

எனினும், அது நடைபெறவில்லை. மேலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்று ஒரு மாத காலத்தை அண்மிக்கிறது. எனினும் உள்ளூராட்சி மன்றங்களை அமைக்க முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெற்ற பின்னர் சபைகளை அமைப்பதற்கு இவ்வாறு நீண்ட காலம் எடுத்த சந்தர்ப்பம் இதுவாகும். தேர்தலை நடத்தாது நல்லாட்சி அரசு நீண்ட காலம் இழுத்தடிப்புச் செய்து வந்தது. அத்துடன், தற்போது உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதற்கும் முதுகெலும்பற்ற நிலையில் அரசு உள்ளது.




ஆகவே நல்லாட்சி அரசை ஆட்சிபீடத்திலிருந்து வீட்டுக்கனுப்ப வேண்டும். அதற்காக மக்களை வீதிக்கிறக்கிப் போராடவுள்ளோம். எனவே எதிர்வரும் ஏழாம் திகதி நூகேகொடையில் அரசுக்கு எதிராக பேரணி நடத்தவுள்ளோம்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தற்போது சிங்கப்பூர் முகவரியில் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே அர்ஜுன மகேந்திரன் தொடர்பில் பிரதமரே பொறுப்புக்கூற வேண்டும். அர்ஜுன மகேந்திரன் பிடிபட்டால் சகல விடயங்களும் வெளிப்படும். எனவே அவரை மறைத்து வைப்பதற்கே பிரதமர் முயற்சிக்கிறார்.

மேலும் ரணில் விக்கிரமசிங்க தனது பதவியைத் தக்க வைத்துக்கொள்வதற்கே இவ்வாறு செய்கிறார். அவருக்கு பிரதமர் பதவி இல்லாமல் போகுமாயின் சகல விடயங்களையும் சம்பந்தப்பட்டவர்கள் வெளியிடுவர். ஆகவேதான் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரை மறைத்து வைத்துள்ளனர். அர்ஜுன மகேந்திரனை திட்டமிட்டே மறைத்து வைத்துள்ளனர்.

அத்துடன், பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாம் ஆதரவு வழங்கு வோம். அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டு எதிர்க் கட்சிகொண்டு வருவதற்கு ஏற்கனவே தயாராக இருந்தது.

எனினும், தற்போது ஐக்கிய தேசியக் கட்சி அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருமாக இருந்தால் அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பிரபலங்கள் உட்பட அதிகளவானோர் அதற்கு ஆதரவு வழங்கவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## உலக நீதித்திட்ட சட்டவாட்சி சுட்டெண் பட்டியலில் இலங்கை முன்னேற்றம்

கொழும்பு, மார்ச் 03

சாதாரண மக்களது கண்ணோட்டத்தின் அடிப்படையில் சட்டவாட்சியை மதித்து நடக்கும் நாடுகளின் பட்டியலை ஆராய்கையில் பிராந்திய அடிப்படையில் இலங்கை முன்னணியில் திகழ்கிறது.

உலக நீதித் திட்ட சட்டவாட்சி சுட்டெண் பட்டியலில் 113 நாடுகள் பட்டியலிடப்பட்டன. இந்தப்பட்டியலில் இலங்கை 68 ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த பட்டியலுடன் ஒப்பிடுகையில் இலங்கை 9 இடங்களால் முன்னேற்றம் கண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சட்டவாட்சி சுட்டெண் பட்டியலில் டென்மார்க் முத லிடத்தில் உள்ளது. வெனிசுவேலா கடைசி இடத்தைப் பிடித்துள்ளது. ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில் சிங்கப்பூருக்கு முதலிடம்.

கம்போடியா 112 ஆவது இடத்திலும், மலேசியா 53வது இடத்திலும், நேபாளம் 58வது இடத்திலும் உள்ளன. இந்தியா 62 ஆவது இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் கண்டனப் போராட்டத்துக்கு அழைப்பு

சிரியாவில் இடம்பெற்று வரும் மனிதப் படுகொலையை கண்டித்து மன்னாரில் இடம்பெறவுள்ள கண்டனப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தை இன்று காலை மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இன்று காலை 9 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில், சிரியாவில் இடம்பெற்று வரும் மனிதப் படுகொலையைக் கண்டிக்கும் வகையில் போராட் டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்து மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அலோஷியஸ், பலிசேன தொடர்ந்தும் விளக்கமறியலில்!



பிணைமுறி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பேர்பச்சுவல் ட்ரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோஷியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்னவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




## நற்செயலும் நற்பண்பும்

அவர் (இயேசு) அவர்களை நோக்கி, நீங்கள் மனிதர் முன்பாக உங்களை நீதிமான்களாக காட்டுகிறீர்கள். தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்.

அவர் (இயேசு) அவர்களை நோக்கி, நீங்கள் மனிதர் முன்பாக உங்களை நீதிமான்களாக காட்டுகிறீர்கள். தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். மனிதருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது. – லூக்கா 16:15

இன்று அன்பு சார்ந்த நற்பணிகளை செய்கின்ற பலரின் தனிப்பட்ட வாழ்க்கை வட்டத்தில் அன்பின் வாசனை சற்றும் இல்லை. ஜனங்களின்பிரச்சினைகளுக்காக இரங்கிசமூகநலஸ்தாபனங்களை நடத்துகிற பலரிடம் இரக்க உணர்வு இதயத்தில் இல்லை. பரிசுத்தத்தை குறித்தும் ஆத்ம ஆதாயத்தை குறித்தும் பிரமாதமாக பேசுகிற பலரால் பெரிய ஊழிய ஸ்தாபனங்களை உருவாக்க முடிகிறது. ஜனங்களுக்கு நடுவில் பெரிய ஊழியர்களாக பிரபலமடைய முடிகிறது. ஆனால், அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைகளே பரிசுத்தத்தை அறியாதவைகளாகவும், பொருள் ஆதாயங்களை நோக்கமாக கொண்டவைகளாகவும் இருக்கின்றன.

மனிதர்கள் நாம் பேசுவதை கேட்பார்கள் . கடவுளோ, நமது உள்ளத்தில் உள்ளது என்ன என்பதை பார்ப்பார். மனிதர்கள் நம்முடைய செயல்களை பார்த்து மெச்சுவார்கள். கடவுளோ, அவைகளுக்கு அடிப்படையாக இருக்கவேண்டிய உண்மையான பண்பு நிலைகள் இல்லாததை கண்டு விசனப்படுவார். நம்முடைய நற்செயல்கள் பலருடைய பாராட்டுகளை பெறும் அதே வேளையில் நற்குணங்கள் இல்லாத இதய நிலைகளை கடவுள் பார்த்து தமது கோபத்தையே நம்மேல் பொழிவார். நற்செயல்களுக்கு முன்பு நற்பண்புகளை நம்மிடம் காண கவனமாகஇருப்போமாக .

## விமானப்படையின் சைக்கிளோட்டப் போட்டி ஆரம்பம்



கொழும்பு, மார்ச் 03

இலங்கை விமானப் படையின் 67 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சைக்கிள் சவாரி நேற்று ஆரம்பமானது.

கொழும்பில் உள்ள விமானப் படை தலைமையக வளாகத்தில் இந்தச் சைக்கிளோட்ட சவாரி நேற்று ஆரம்பமானது.

இதனை விமானப்படையும், இலங்கை சைக்கிள் ஓட்டச்சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

நேற்று ஆரம்பமாகிய இந்தப் போட்டி எதிர்வரும் 4ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இதில் 150 இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

# காட்டு யானைகளைத் தடுக்க தேனீ வளர்ப்புச் செயற்பாடு

காட்டு யானைகள் கிராமத்தினுள் வரவிடாமல் முன்னெடுக்கப்பட்டுள்ள தேனீ வளர்ப்புச் செயற்பாடு வெற்றியளித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையினால் போரதீவுப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட ஆனைகட்டியவெளி கிராமத்தினுள் வரும் காட்டு யானைகளை தடுப்பதற்காக, காட்டு யானைகள் நடமாடும் பகுதிகளில் 500 மீற்றர் இடைவெளிக்குள் 20 தேனீப் பெட்டிகள் வைக்கப்பட்டன.

கடந்த மாதம் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள போதிலும், நேற்றைய தினம் முன்னேற்றங்கள் தொடர்பில் செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் ஆனைகட்டியவெளிக் கிராமத்திற்கு சென்று அம்மக்களிடம் கேட்டறிந்து கொண்டனர்.

தேனீப்பெட்டிக்கள் அமையப் பெற்றுள்ள பகுதிகளுக்கு யானைகள் வந்துள்ளபோதிலும் அவற் றால்தேனிப்பெட்டிக்களைக் கடந்து கிராமத்தினுள் வரமுடியாமல் மீண்டும் திரும்பிச் சென்று விட்டன.

எனினும், வேறு வழியில் வந்த யானைகள் கிராமத்தின் எல்லைக்கு வந்து அங்கிருந்த தென்னை மற்றும் வாழை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளன எனக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். இச் செயற்றிட்டம் இலங்கையில் முதன்முறையாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

## மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 350 பொலிஸாருக்கு இடமாற்றம்

மட்டக்களப்பு,மார்ச் 03

வருடாந்த இடமாற்றத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சுமார் 350 பொலிஸார் நாட்டின் இதர பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. ஜே. ஜாகொட ஆராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாத ஆரம்பம் தொடக்கம் இந்த வருடாந்த இடமாற்றம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டிருந்ததன் பின்னர் இந்த இடமாற்றம் தற்போது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த வார இறுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நகரப் பிரதேசங்களான மட்டக்களப்பு நகரம், ஏறாவூர், வாழைச்சேனை, காத்தான்குடி உள்ளிட்ட மாவட்டத்திலுள்ள 12 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய சுமார் 350 இற்கும் மேற்பட்ட பொலிஸார் வழமையான இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை நாட்டின் இதர பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய அதே எண்ணிகையிலான பொலிஸாருக்கு மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். (ப)

## மட்டக்களப்பில் சிரியாவுக்காக வீதியில் இறங்கிய தமிழர்கள்

மட்டக்களப்பு,மார்ச் 03

மனித குலத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் யுத்தத்தை நிறுத்துமாறு கோரி நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மட்டக்களப்பில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பாக ஒன்றுகூடிய மட்டக்களப்பைச் சேர்ந்த கலைஞர்கள் சிலரும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைந்து இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கலைஞர்களினால் பறை மேளம் முழங்க இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கே அந்த யுத்தத்தின் வலி தெரியும், இந்த நிலையில் சிரியாவில் முன்னெடுக்கப்படும் அரச படையெடுப்பால் தினமும் நூற்றுக்கணக்கானோர் இறக்கும் நிலையேற்பட்டுள்ளது எனவும் இதன் காரணமாக அப்பகுதியில் மோதல்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

மீண்டும் ஒரு மனிதப் பேரவலம் வேண்டாம், மக்களைக் கொல்வதை நிறுத்து, வல்லரசாதிக்கப் போட்டியில் சிறுவர்களைக் கொல்லாதே, சிரியாவில் யுத்த நிறுத்தம் வேண்டும், 2009 முள்ளிவாய்க்கால் 2018 சிரியா? போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (ப)

## மட்டக்களப்பில் வீசிய மினி சூறாவளி; ஆயிரத்து 160 குடும்பங்கள் பாதிப்பு





கல்முனை,மார்ச் 03

கல்முனை தமிழ்ப்பிரிவுப் பிரதேச செய லகப் பிரிவிற்குட்பட்ட பெரியநீலாவணை கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் பெரியநீலாவணை சுனாமி தொடர்மாடிக்குடியிருப்பு மனையில் திடீரென வீசிய மினி சூறாவளியினால் அங்குள்ள மக்கள் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளனர்.

கல்முனைப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கடும் காற்றுடன் கூடிய மழை பெய்துவருகின்றது. இந்த நிலையில் நேற்முன்தினம் பெரியநீலாவணை தொடர்மாடிக் குடியிருப்புப் பகுதியில் மினி சூறாவளி வீசியது. இதனால் தொடர்மாடியிலுள்ள மேற்கூரைகள் தூக்கிவீசப்பட்டுள்ளமையுடன் வீடுகளில் இருந்தவர்களும் பாதிப்புக்குள்ளாகினர்.

இங்குள்ள தொடர்மாடிகளில் ஆயிரத்து 160 குடும்பங்கள் வசிக்கின்றனர். இதில் 216 தொடர்மாடி வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன; 15 தனியார் வீடுகள் பாதிப்புற்றுள்ளன எனக் கிராம உத்தியோகத்தர் எஸ்.அமலதாஸ் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது பெரிய நீலாவணை சரஸ்வதி வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ப)

## கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் மீது கல்வீசி தாக்குதல்

அம்பாறை,மார்ச் 03

சம்மாந்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றின் மீது கல்வீச்சுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இந்த பஸ் அம்பாறை நகரப்பகுதியை அண்மித்துப் பயணித்துக் கொண்டிருக்கையில் இந்தக் கல்வீச்சுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதன் காரணமாக பஸ்ஸின் பக்கவாட்டுக் கண்ணாடிகள் சேதமடைந்துள்ள போதிலும், பயணிகளில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பாக அம்பாறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ப)



## பிரிகேடியர் பிரியங்க விவகாரம்:

# விசாரணைகளை முடிக்கும் வரை மேலதிக நடவடிக்கை இல்லை!

### பிரித்தானிய தூதரகம் தகவல்



பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணைகளை இலங்கை அரசு முடிக்கும் வரை, பிரித்தானியா மேலதிக நடவடிக்கைகளை எடுக்காது என்று கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய புலம்பெயர் தமிழர்களை நோக்கி, கழுத்தை அறுத்து விடுவேன் என்பது போல, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, அச்சுறுத்தியிருந்தார்.

இந்தச் சம்பவம் குறித்த சர்ச்சைகளை அடுத்து, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ கடந்த மாதம் கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.

எனினும், அவரது மனைவி, பிள்ளைகள் லண்டனில் தங்கியுள்ள நிலையில், அவர்களையும் திருப்பி அனுப்ப வேண்டும் என்று உலகத் தமிழர் பேரவை கோரியிருந்தது.

இதுகுறித்து கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதரகத்திடம், கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்கு பிரித்தானிய தூதரகம் அனுப்பியுள்ள பதிலில், லண்டனில் உள்ள சிறிலங்கா தூதரகத்துக்கு வெளியே நடந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுடன் இலங்கை அரசு தற்போது கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது.

இலங்கை அரசு இந்த விசாரணைகளை முடிக்கும் வரை, இதுபற்றி பிரித்தானியா கருத்து வெளியிடுவதோ, மேலதிக நடவடிக்கை எடுப்பதோ பொருத்தமானது அல்ல என்று கூறப்பட்டுள்ளது.

## வடக்கிலும் மழை பெய்வதற்கான வாய்ப்புக்கள் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

ஊவா மாகாணத்திலும் அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் ஓரளவு மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடமாகாணத்தின் பல இடங்களில் குறிப்பாக பிற்பகல் 2.00 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் .

மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் பல இடங்களிலும் சுமார் 100 மில்லிமீற்றர் மழை எதிர்பார்க்கப்படுகின்றது.

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு ஊடாக அம்பாந்தோட்டை வரையான மற்றும் காலியிலிருந்து கொழும்பு ஊடாக புத்தளம் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட ஆழம் குறைந்த மற்றும் ஆழம் கூடிய கடற்பரப்புகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். இடிமின்னலிலிருந்து பொதுமக்களை அவதானமாக செயற்படுமாறு திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.


## மெதிரிகிரிய வைத்தியசாலையை திறந்து வைத்தார் மைத்திரி

கொழும்பு, மார்ச் 03

மெதிரிகிரிய வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட் டுள்ள, தாதியர் விடுதி, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மகப்பேற்று மருத்துவ நிலையம், சிறுநீரகநோய் நிவாரணப் பிரிவு ஆகியன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டன.

வைத்தியசாலையில் நிலவிய பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் பிபிதெமு பொலன்னறுவை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 90 மில்லியன் ரூபா செலவில் இந்தப் புதிய நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வடமத்திய மாகாண ஆளுநர் டி.பி.திசாநாயக்க, முன்னாள் மாகாண சபை அமைச்சர் சம்பத் ஸ்ரீநிலந்த, மாகாண சபை சுகாதார செயலாளர் சமன் பந்துலசேன, மாகாண சுகாதார பணிப்பாளர் பாலித்த பண்டார, மெதிரிகிரிய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி சுனில் சென ரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## நாட்டில் ஜனாதிபதி இருக்கின்றாரா? கீதா குமாரசிங்க கேள்வி எழுப்புகிறார்

கொழும்பு, மார்ச் 03

நாட்டில் ஜனாதிபதி ஒருவர் இருக்கின்றாரா என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க கேள்வி எழுப் பியுள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் ஜனாதிபதி பற்றி பேசுவதற்கு சோர்வாக உள்ளது. நாட்டில் தற்போது ஜனாதிபதி இருக்கின்றாரா என்பதே தெரியவில்லை. முடிந்தால் இந்த அரசு பொதுத் தேர்தலை நடத்திக் காண்பிக்கட்டும்.

நாட்டில் எந்தவொரு அபிவிருத்தியையும் பார்க்க முடியவில்லை. மாறாக நாடு நாளுக்கு நாள் அதல பாதாளத்திற்கு செல்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

பலர் என்னுடைய குடியுரிமை பற்றிப் பேசினாலும் நான் எனது வெளிநாட்டு குடியுரிமையை ரத்து செய்து கொண்டுள்ளேன். கள்வர்களைப் பிடிக்கும் பொறுப்பு பிரதமரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

பிரதமருக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய வங்கி பிணை



முறி மோசடி குறித்த குற்றச்சாட்டுக்கள் வெளிக்கொணரப்படாது.

நாட்டின் சட்டம் ஒழுங்குத் துறைக்கு கடவுளின் துணை மட்டுமே. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் சரியான பாடத்தை அரசுக்கு புகட்டியிருந்தனர். எதிர்காலத் திலும் மக்கள் சரியான பாடங்களை இந்த அரசுக்குப் புகட்டுவார்கள் என்றும் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

## தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்த உத்தரவு



கொழும்பு, மார்ச் 03

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்படும் 2018 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்துமாறு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உயரதிகாரிகளுடன் சபையின் கேட்போர் கூடத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

கொழும்பு பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டு வரும் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தியாகும்போது தேவைப்படக் கூடிய குடிதண்ணீர் தொடர்பாக ஏற்படும் கேள்விகளுக்கு போதிய நீரைப் பெற்றுக்கொடுக்கவும், வறட்சிக் காலங்களில் களுகங்கை மற்றும் களனி கங்கை பிரதேசங்களில் குடிதண்ணீரில் உவர்நீர் கலப்பதை தவிர்க்க தடுப்புச்சுவர் அமைக்கும் திட்டத்தை விரைவுபடுத்தும் நோக்கில் அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# சட்ட அமைச்சராக பொருத்தமானவர் வருவார்

## அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகிறார்

அடுத்து மேற்கொள்ளப்படும் அமைச்சரவை மாற்றத்தின் போதே சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவிக்கு பொருத்தமானவர் நியமிக்கப்படுவார் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்திய நிதியுதவியில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வசிக்கும் வருமானம் குறைந்த ஆயிரத்துக்கும்மேற்பட்ட குடும்பங்களுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று அங்குணகொலபெலஸ்ஸையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரும் நீரியல் வளங்கள், மீன்பிடித் துறை அமைச்சருமான மஹிந்த அமரவீர இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக நியமிக்கப்படும் நபர் பக்கச்சார்பற்றவராக இருக்கவேண்டும். பாதாளக் குழுக்களை அடக்கும் திறமை, போதைப் பொருள் வர்த்தகத்தை ஒழிக்கும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியவராக இருக்கவேண்டும்.

அவ்வாறான தகுதிகள் கொண்ட ஒருவருக்கே அடுத்த அமைச்சரவை மாற்றத்தின்போது சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும்.

கடந்த அமைச்சரவை மாற்றத்தில் எங்களுக்கும் அதிருப்திகள் உள்ளன. ஆனால் கட்சியின் நலன் கருதி ஜனாதிபதியின் முடிவை ஏற்றுக்கொண்டுள்ளோம். – என்றார். (ஐ)

## தினசரி ராசி பலன்
(03.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 19 ஆம் நாள் சனிக்கிழமை துவிதீயைத்திதி பி.இ.2.18 மணி வரை பின்னர் திரிதீயை. நட்சத்திரம்: உத்தரம் இரவு 8.55 மணி வரை பின்னர் அத்தம். மரணயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *காலை 9.23 மணி முதல் 10.53 மணி வரை*

**சுபநேரம்** - *மாலை 3.19 மணி முதல் 4.49 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மாசி மாத தேய்பிறை துவிதீயை.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு: உத்தரம்.**

**'ஜோதிடமணி' பிரம்மஶ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** – இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். எந்த தொழில் செய்தாலும், ஆதாயமும், நன்மையையும் பெற்று மகிழ்ச்சி அடைவார்கள்.

**ரிஷபம்** – இனிமையான நாள். பணப்புழக்கம் சரளமாகப் இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கையும், விரும்பிய மணவாழ்வு கிடைக்கும்.

**மிதுனம்** – சலனமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் பிரச்சினை உண்டாகும். செய்யும் தொழிலில் வருமானம் குறையும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு உண்டாகும்.

**கடகம்** – சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரத்தில் ஓரளவு வளர்ச்சி இருக்கும். பல போட்டிகளையும், ஏமாற்றங்களையும் சந்திக்க நேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**சிம்மம்** – மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, பதவி உயர்வு பணபலன்களைப் பெறுவார்கள். சகோதர உறவு பலப்படும்.

**கன்னி** – நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரிகளுக்கு ஆடம்பரப் பொருள் விற்பனையில் ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்** – அலைச்சல் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். கடன் தேடி அலைவார்கள். உடல்நலக் குறைவால் மருத்துவ உதவியை நாடுவார்கள். உத்தியோகபூர்வமாக வெளியூர்களுக்கு அலைவார்கள்.

**விருச்சிகம்** – உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். வியாபாரிகளுக்கு வெளிநாட்டுத்தொழில் சார்ந்த தொடர்பு உண்டாகும். கலைஞர்களுக்கு வெளியூர், வெளிநாட்டுத்தொடர்புகள் நன்மையைத் தரும்.

**தனுசு** – சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவு உண்டாகும். குடும்பத்தில் அமைதி ஓரளவு சீராக இருக்கும். வியாபாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும்.

**மகரம்** – ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். வியாபாரத்தில் அமோக வளர்ச்சி உண்டாகும்.

**கும்பம்** – சலனம் மிகுந்த நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் குழப்பம் மிகுந்து காணப்படும். வியாபாரத்தில் போட்டிகளால் வாடிக்கையாளர்களின் வரவு குறையும்.

**மீனம்** – விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் நல்லிணக்கம் உண்டாகும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். உடல்நலம் சிறப்பாக இருக்கும்.

**சந்திராட்டம நாள்: அவிட்டம் 3ஆம்,4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## உடுவிலில் நடமாடும் சேவை

உடுவில்,மார்ச் 03

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் தென்மேற்கு ஜே/182 மற்றும் உடுவில் மத்தி ஜே/184 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கான நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை மல்வம் ஞானப்பிரகாசர் சனசமூக நிலையத்தில் இடம்பெறும்.

இந்த நடமாடும் சேவையில், வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உடுவில் உப அலுவலக எல்லையில் வசிக்கும் அனைத்து மக்களும் தங்களுடைய வீடுகள், கடைகள், காணிகள் ஒவ்வொரு ஆதனமும் பிரதேசசபை ஆதனப் பதிவேட்டில் தங்கள் பெயர் அதில் பதியப்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

ஆதனப் பதிவேட்டில் தங்களது பெயரில் தங்களது ஆதனம் இல்லாமல் இருந்தால் தங்களுடைய பெயருக்கு மாற்றிக்கொள்வது அவசியமானதாகும். தங்களது ஆதனம் வேறு ஒரு பெயரில் இருந்தால் அதற்குப் பிரதேச சபை பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் தங்களுடைய பெயருக்கு மாற்றுவதாகக் குறிப்பிட்ட ஆதனம் தங்களுடையது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை தாங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். தங்களது ஆதனங்களுக்குரிய ஆதான வரியைச் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் தங்களது ஆதனம் சம்பந்தமான முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

வியாபார உரிமம் சம்பந்தமான சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் ஆகிய கருமங்களும் நடைபெறும் எனப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## காரைநகரில் இன்று விளையாட்டு விழா

காரைநகர்,மார்ச்03

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா, இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காரைநகர் இந்துக்கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் ஈ.தயாரூபன் தலைமையில் இடம் பெறும்

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி ரா.கமலரூபன், கௌரவ விருந்தினர்களாக பிரித்தானிய காரைநகர் நலன் புரி சங்கத் தலைவர் ப. தவராஜா, யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி கே.விஜிதரன், காரைநகர் சக்தி கல்வி மேம்பாட்டுநிலைய இயக்குநர் நா. இந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## இளவாலையில் நாளை இரத்ததான முகாம்

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் 6 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தி வரும் இரத்த தான முகாம்களின் வரிசையில்–

பத்தாவது இரத்த தான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை கலைமகள் படிப்பகத்தில் காலை 9 மணி முதல் நடை பெறும்.

இதன்போது தொடர்ச்சியாக எமது இரத்த தான முகாம்களில் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கிய கொடையாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெறும். (இ)

## விஸ்டத்தின் வெற்றி விழா

யாழ்ப்பாணம்,மார்ச்03

விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்று பரீட்சையில் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் "விஸ்டத்தின் வெற்றி விழா" விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் க.ரவிக்குமார் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடாதிபதிப் பேராசிரியர் க. கந்த சாமியும், சிறப்பு விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பொ.ஐங்கர நேசனும், கௌரவ விருந்தினராக யாழ். இந்துக்கல்லூரி அதிபர் சதா. நிமலனும் கலந்து கொள்வர். (இ)

## மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்புமற்றும்பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிறு காலை 08.30 மணியிலிருந்து மாலை 06.00 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** - அரசர்கேணி, கச்சாய்வெளி, தர்மகேணி, முகமாலை, இத்தாவில், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி, நாகர்கோவில், குடாரப்பு, மாமுனை, செம்பியன் பற்று, நெல்லியான் இராணுவ முகாம், மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவழை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாகவிகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, ரயில் நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ் 2ம், 3ம், 4ம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் ரயில் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக் கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதோண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ் ரயில் நிலையம், Green Grass விடுதி, சிறிநிதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC ஞானம்ஸ் விடுதி, ரொப்பாஸ், வெற்றிலைக் கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும்,

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

எம்.எஸ்.ஸ்ரீதயாளனின் இலங்கையிலும் தமிழகத்திலும் கதா பிரசங்ககலை மற்றும் 'அர்த்தமுள்ள சம்பிர தாயங்கள்' ஆகிய நூல் களின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் யாழ். நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச் சர் நீதியரசர் சி.வீ.விக் னேஸ்வரன் உரை யாற்றினார்.அவரின் பிரதம அதிதி உரை இங்கு தரப்படுகின்றது.



நூல் வெளியீட்டு நிகழ்வில் முதற்பிரதியை பொன்மணிச் செல்வன், கல்விக் கருண்யன் இ.எஸ்.பி. நாகரத்தினம் முதலமைச்சரிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

# நாவலரை நினைவுறுத்தும் கதாப்பிரசங்க கலையை அழிய விடாது காப்பது எம் தலையாய கடமை

இலங்கையில் கதாப்பிரசங்க முறைமைக்கு தனிச்சிறப்பை முதன் முதலில் தேடித்தந்த முதலாவது நல்லை குருமகா சந்நிதானம் மணி ஐயர் அவர்களின் 100 ஆவது நினைவு தினத்தையொட்டி அவர் ஞாப கார்த்தமாக 'இலங்கையிலும் தமிழகத்திலும் கதாப்பிரசங்கக் கலை' என்ற நூலை வெளியிட்டு வைப்பதுடன் 'அர்த்தமுள்ள சம்பிரதாயங்கள்' என்ற இன்னொரு நூலையும் வெளியிட்டிருப்பது மிகப் பொருத்தமானது.

கதாப் பிரசங்கக் கலை என்பது இசைப் பாடல்களோடு இனிய கதைகளை பொது மக்கள் ஆர்வத்துடன் கேட்டு இரசிக்க க் கூடிய வகையில் எடுத்துக் கூறுகின்ற ஒரு பாரம்பரியக் கலைமுறைமையாகும். தனியொருவர் இசைப்பாடல்களோடு இணைந்து ஒரு கதையை மக்கள் ஆர்வத்துடன் கேட்டு மகிழக்கூடிய வகையில் ஆற்றுப்படுத்தப்படுகின்ற ஒரு கலையாக இதனைக் கூறமுடியும்.

சைவச்சிறார்களுக்கு சைவ சமயம் பற்றிய போதகைளை வழங்குவதற்கு பிரசங்கமுறைமையே மிகப் பொருத்தமானது என்ற கோட்பாட்டில் வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 1847 டிசெம்பர் 31 ஆம் திகதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் முதன் முதலில் ஆரம்பித்துவைக்கப்பட்ட கதா பிரசங்க முறைமையே பின்னாளில் பல மெருகூட்டல்களுடனும் பக்க வாத்தியங்களுடனும் மக்கள் மனதை ஈர்க்கும் கலையாக பரிணமித்தது.

தமது கதாப்பிரசங்க முறைமையால் உலகையே வலம் வந்த சுவாமி கிருபானந்தவாரியார் அவர்களாலும் நல்லை ஆதீன முதலாவது குரு மகா சந்நிதானம் மணிபாகவதர் அவர்களாலும் இந்தக் கலை சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

சங்கீத கதாப்பிரசங்கம் என்றவுடன் எமது நினைவுக்கு வருபவர்கள் தென்னிந்தியாவில் சுவாமி கிருபானந்தவாரியாரும் அதேபோன்று இலங்கையில் மணிபாகவதரும் ஆவர். பழுத்த சிவப்பழமான தோற்றப் பொலிவுடன் கிருபானந்த வாரியார் அவர்கள் மேடையில் அமர்ந்து கைத்தல நிறை கனி என்று ஆரம்பித்து நகைச்சுவைகளுடன் கூடிய கதாபிரசங்க முறைமையை அவருக்கே உரிய ஒரு தனியான பாணியில் வெளியிட்டு வந்தமை சற்று வயது வந்தோருக்கெல்லாம் நினைவிருக்கும்.

அதே போன்று மணிபாகவதரும் யாழ்ப்பாண இசைப்பாரம்பரிய மரபிலே கணீர் என்ற குரலில் கதாப்பிரசங்கம் நடத்தியமை இன்னும் சில வருடங்கள் மூத்தவர்களால் கண்டும் கேட்டும் இருந்திருக்கப்படும். என் இள மைக் காலத்தில் மணி பாகவதர் கதா காலட்சேபம் என்றால் தவறாது போய் முன் வரிசையில் இருந்து கேட்டு இன்புறுவேன். அவரின் வழியில் பின்னர் தோன்றிய பிரசங்கிமார்கள் கதாப்பிரசங்கத்தை சிறப்பாக ஆற்றுவதற்கு இலங்கையில் வித்திட்டவர் மணிபாகவதரேயாவார்.

நாவலர் பெருமானின் காலத்தில் பக்கவாத்திய இசைகளுடன் கூடிய கதாப் பிரசங்க முறைமையை முன்னெடுத்துச் செல்வதற்கான வசதிகள் இல்லாதிருந்தன. அப்படியிருந்தும் அவர் சைவசித் தாந்தக் கதைகளிலும் புராணக்கதைகளிலும் பெற்றிருந்த அதீத அறிவு காரணமாக சைவசித்தாந்தத் தத்துவங்களை கதாப்பிரசங்க வடிவில் இசையுடன் சேர்த்து மக்களுக்கு எடுத்துக் கூறியதன் மூலம் இலகுவில் சைவச்சிறார்களின் மனதில் அவர்களின் சமய நீதிகளையும் கருத்துக்களையும் பதிய வைக்கின்ற நிகழ்வை சிறப்புற ஆற்றியிருந்தார்.

**சினிமா நடைமுறைக்கு வராத காலத்தில்...**

சினிமா நடைமுறைக்கு வராத அக் காலத்தில் எமது மக்களுக்கான தெய் வீகக் கதைகளையும் திருவிளையாடல்

> “எனது பத்து பதினொராம் வயதில் எனக்கிருந்த வாழ்க்கையின் குறிக் கோள் சிறந்த கர்நாடக இசை விற்பன்னராக வர வேண்டும் என்பது. ஆனால் தெருவில் சென்ற ஒரு கர் நாடக இசைப் பயிற்றுவிப்பாளரைக் காட்டி என் தாயார் இவர் போல் தெருத் தெருவாய் அலைய வேண்டிவரும் நீ கர்நாடக இசையைத் தேர்ந்தெடுத்தால் என்று கூறி என் இசைப் பயணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.”

களையும் எடுத்துக் கூறுவதற்கு கதா காலட்சேப முறைமையே அதி சிறந்த பொறி முறையாக இருந்தது.

இதனை இலகுவில் முன்னெடுத்துச் செல்ல கர்நாடக சங்கீதம் அதற்குப் பக்கபலமாக அமைந்தது என்றால் மிகையாகாது. உண்மையில் சினிமாவுடன் கூடிய மெல்லிசை முன்னணிக்கு வர முன் என்னுடைய குழந்தைப் பிராயத்தில் எல்லாம் அக்காலத்தைய கர்நாடக இசை

> **சங்கீதத்தை கைவிட்டு சங்கடமான சட்டத்தினுள் உள்நுழைந்தேன் நான்...!**

மேதைகளின் சங்கதிகளையே முணு முணுத்துக் கொண்டிருப்போம்.

வி.வி. சடகோபன், துறையூர் இராஜகோபால சர்மா, ஜி.என். பாலசுப்பிரமணியம், முசிறி சுப்பிரமணிய ஐயர், N.R.வசந்த கோகிலம், D.K.பட்டம்மாள் போன்றவர்களின் கர்நாடகப் பாடல்களையே ஆல் இந்தியா ரேடியோவின் திருச்சி வானொலி நிலையம் அக் காலத்தில் ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

இயல், இசை, நாடகம் ஆகிய முப்பரிமாணங்களையும் கொண்ட கலைவடிவமாக அமைந்த கதாப் பிரசங்க முறைமை சமயக் கதைகளையும் மற்றும் சமய வரலாறுகளையும் எடுத்துக் கூறுவதற்கு ஏற்ற ஒரு வடிவமாக காணப்பட்டமையால் இலங்கையில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்கில் உள்நுழைந்த அமெரிக்கத் திருச்சபைகளும் மற்றும் தென்னிந்தியத் திருச்சபைகளும் எமது கதாகாலட் சேப முறை மையை உள் வாங்கி அவற்றின் கட்டமைப்புக் களுள் சில மாற்றங்களை உருவாக்கி நளினங்களுடன் கூடிய ஒரு கூத்து வடிவமாக அக் கலையை மக்கள் முன் காட்சிப்படுத்தினார்கள்.

அவர்களின் சமயப்பரம்பல்களுக்கு இம்முறைகளைப் பயன்படுத்தியமை பின்னாளில் தென் மோடிக் கூத்து வடிவத்திற்கு ஒப்பானதாக அது உணரப்பட்டது. அதேபோன்று இந்தியாவிலும் குறிப்பாக தமிழகத்தில் ஹரிகதை, இசைக் கதை, சிவகதை, காலட்சேபம், புராண இசை, உபந்நியாசம் எனப் பல பெயர்களுடன் இம்முறைமை மேடையேற்றப் பட்டு வந்தது.

தற்போதும் இந்தியாவில் மிகச் சிறந்த கதாகாலட்சேப வித்துவமாணியாகிய வித்துவம் நிரம்பிய ஸ்ரீமதி விஷாகா ஹரி அவர்களின் கதாப்பிரசங்க முறைமையும் மிகவும் எளிமையான இசை வடிவத்துடன் கூடிய கதையைக் கொண்டு செல்லும் விதமாக அமைந்துள்ளது. அவரின் ஆற்றல் அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

இளமையில் கல்வியில் மிகச் சிறந்து விளங்கிய திருமதி ஹரி இரசாயனவியல் கற்கை நெறியில் 200/200 என்ற புள்ளியடிப்படையில் உயர்தர விஞ்ஞானக் கற்கை நெறியில் தேறியபோதும் தாய் தந்தையர் பிரியப்பட்ட மருத்துவ கற்கை நெறித்தேர்வுக்கு முழுக்குப் போட்டுவிட்டு வர்த்தகம் புவியியல் பாடங்களைத் தெரிவு செய்து தனது கலைமாணிப்பட்டத்தை பெற்ற பின்னர், ஓர் வங்கி உயர் அதிகாரியாகவோ அல்லது நிர்வாக தலைமைத்துவப் பொறுப்பாளராகவோ வரவிரும்பவில்லை.

முழுநேர கதாப்பிரசங்க நிகழ்வுகளில் ஈடுபட்டு இன்று உயர் நிலையில் இருப்பது வரவேற்பிற்குரியது. திருமதி ஹரி அவர்களின் பெயரை உள்நுழைத்தமைக்குக் காரணம் கதாப்பிரசங்க நிகழ்வுகளை ஆற்றுவது மருத்துவத்துறைக் கும் நிர்வாக உயரதிகாரி தரத்திற்கும் ஒப்பானதே என எடுத்துக்காட்டியவர் அவரே என்பதாலாகும்.

**என் இசைப் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த தாயார்**

எனது பத்து பதினொராம் வயதில் எனக்கிருந்த வாழ்க்கையின் குறிக் கோள் சிறந்த கர்நாடக இசை விற்பன்னராக வர வேண்டும் என்பது. ஆனால் தெருவில் சென்ற ஒரு கர்நாடக இசைப் பயிற்றுவிப்பாளரைக் காட்டி என் தாயார் இவர் போல் தெருத்தெருவாய் அலைய வேண்டிவரும் நீ கர்நாடக இசையைத் தேர்ந்தெடுத்தால் என்று கூறி என் இசைப் பயணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

எங்கள் குடும்பத்தில் இருந்த சட்டத் தரணிகள் பலரைக் குறிப்பிட்டு அவர்கள் போல் சட்டத் தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கண்டிப்பாய் கூறிவிட்டார். ஆகவேதான் சங்கீதத்தை விட்டு சங் கடமான சட்டத்தினுள் உள் நுழைய வேண்டி வந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க...)

நாவலரை நினைவுறுத்தும்

# கதாப்பிரசங்க கலையை

## அழிய விடாது காப்பது எம் தலையாய கடமை

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சமய தத்துவங்களையும் கருத்துக்களையும் பாடி ஆடி இசைந்த முறையில் வெளிக்கொண்டுவருவதே கதாகாலட்சேபம். சமய புராண வரலாறுகளை இசைப் பாடல்களாக்கி சாகித்திய பண்ணமைத்து பக்க வாத்திய இசையால் மெருகூட்டச் செய்து பிரசங்கிக்கும் கதாப்பிரசங்க முறைமை ஏனைய பிரசங்க முறைமைகளை விட சற்றுக் கடினமானது என்றும் மேலும் இக்கலைக்கு நிறைந்த புராண இதிகாச அறிவும் இலக்கண இலக்கிய பயிற்சிகளும் கருத்துக்களைக் கோர்வையாக்கி கதை களாக்கும் தன்மையும் சிறப்பான இசை ஞானமும் கூடவே ஆசார முறைமையும் அலங்காரமும் இருந்தே ஆக வேண்டும் என்றும் நூலாசிரியர் கூறியுள்ளார் தமது நூலில்.

சிறந்த மேடைப் பேச்சாளர்களோ அல்லது சங்கீத வித்துவான்களோ சிறந்த கதாப் பிரசங்கிகளாக ஆகிவிட முடியாது. மாறாக இயல் வழி வந்த இசையும் அதன் மூலம் வெளிப்படுத்துகின்ற நாடகத்தோற்ற முமே கதாப்பிரசங்கத்திற்கு அத்தியா வசியமானவை. அந்த வகையில் இயல், இசை, நாடகம் மூன்றையும் கலந்து வெளிக்கொண்டுவருவதே கதாப்பிர சங்கக்கலை.

கதாப்பிரசங்க பயிலுகைக்கு இந்தியாவில் விசேட மாக தஞ்சையில் கரந்தை என்னும் இடத்தில் பயிற்சிக் கல்லூரியொன்று அமைந்திருப்பதாக கூறப்படுகின்றது. எனினும் இங்கு அவ்வா றான பயிற்சிக் கல்லூரிகள் எதுவும் இல்லை. அந்த நிலையில் சைவக் கோவில்களிலும், நல்லை ஆதீனத்திலும், இன்னும் பல சைவ அபிவிருத்தி மன்றங்களிலும் அறநெறிப் பாடசாலைகளை அமைத்து அங்கு பயிலுகின்ற பிள்ளைகளில் கதா காலட்சேபத்தில் விருப்புடைய பிள்ளைகளுக்கு விசேட பயிற்சி களை அளிக்க நாம் முன்வர வேண்டும். நாவலரை நினைவுறுத்தும் இந்தக் கலை அழியாமல் பார்த்துக்கொள்வது எமது தலையாய கடமையாகும்.

எமது பிள்ளைகளுக்கு இக் கலையில் நாட்டத்தை உண்டு பண்ணக் கூடிய வகையில் இன்றைய நூல் ஆசிரியர் ஸ்ரீ.தயாளன் மற்றும் நித்தியானந்த சர்மா, பேராசிரியர் கனக.நாகேஸ்வரன் போன்ற கதாப் பிரசங்கிகளின் நிகழ்ச்சி களை ஞாயிற்றுக் கிழமைகளில் நல்லை ஆதீன மண்டபத்திலும் மற்றும் ஆலயங் களிலும் நடத்த நாம் முன்வர வேண்டும். அவ்வாறானதொரு காரியத்தால் சமய அறிவுடன் கூடிய இலக்கிய சுவைகளையும் கதாகாலட்சேப முறையையும் மாணவர்களுக்கு புகட்ட நாம் முன்வர வேண்டும்.

இவ்வாறான சேவைகளை மேற் குறிப்பிட்ட கதாப்பிரசங்கிகள் எந்த வித பிரதி உபகாரத்தையும் எதிர்பாராது மேற்கொள்ள காத்திருக்கின்றார்கள் என்ற நல்ல செய்தி என்னிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அதற்காக என் பாராட்டுக்கள் உரித்தாகுக!

சிறுவயது முதலே இறைபக்தியும் புராண இதிகாசங்கள் பற்றிய அறிவுத் தேடல்களில் நாட்டமும் இசையோடு கதைசெய்யும் கதாப் பிரசங்க முறைமையிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்த ஸ்ரீதயா ளன் ஆரம்ப காலத்தில் கம்பன் கழக விரிவாக்கங்களின் போது கழகத்துடன் இணைந்து பல வழக்காடு மன்றங்களில் பங்குபற்றினார். மேலும் நாடகங்கள்,இராமாயணப் பேச்சுக்கள் என எமது இலக்கிய வட்டத்திற்குள் உட்புகுந்து அங்கு தன் பெயரை நிலை நாட்டி இருந்தார்.

அக்காலத்தில் இராமாயணத்தின் கூனி வேடத் தை திறம்பட ஆற்றியதால் இவ ருக்கு இராமாயணக்கூனி என்ற பட்டப் பெயரும் சூட்டப்பட்டது. எனினும் இவருக்கு இசை மீதும் கர்நாடக சங்கீதம் மீதுந்தான் அதிக ஆர்வம் இருந்தது.

அதன் காரணமாக அந்தத்துறையில் பிரகாசிக்க விரும்பி கதாப்பிரசங்க நிகழ்வுகளுக்குள் தம்மை உட்படுத்திக் கொண்டு இன்று கதாப்பிரசங்க கலை பற்றிய ஒரு நூலை உருவாக்குவதற்குரிய திறமையைப் பெற்றிருக்கிறார் என்றால் இது அவரின் பிறப்பு வழி பெற்றுக் கொண்ட இறையருள் என்றே கூறவேண்டும்.

இடையிற் சில காலம் அரசியற் பின் புலங்களுடன் இணைந்து தமது அரச பணியை முன்னெடுத்துச் சென்ற போதும் ஓய்வுகாலத்தின் பின்னர் முற்று முழுதாக இறைபணியுடன் கூடிய பொதுப்பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டிருக்கின்றமை எமக்கு மகிழ்வைத் தருகின்றது.

ஓய்வு காலத்தில் வீட்டுடன் ஓய்ந்து விடாது முழுமையாக இறைபணி யுடன் தம்மை இணைத்துக் கொண்டு இவ்வாறான படைப்புக்களையும் நூல்களையும் வெளியிடுகின்ற ஸ்ரீதயாளன் அவர்களின் பொதுப்பணியைப் பாராட்டுவதுடன் கதாப்பிரசங்க நிகழ்வுகளில் ஈடுபாடுகளுடைய இளஞ்சிறார்களுள் ஒரு தொகுதியினரையாவது அந்தத்துறையில் வளர்ச்சி பெறுவதற்கு அவர் முயல வேண்டும் என வாழ்த்துகின்றேன்- என்றார் முதலமைச்சர். ★

# பிடிக்கப்படும் மீன்களில் ஆபத்தில்லை!

## *மீன்பிடி அமைச்சு தெளிவுபடுத்துகிறது*

கொழும்பு, மார்ச் 03

இலங்கை கடற்பரப்பில் பிடிக்கப் படும் மீன்கள் மற்றும் கடல் உணவுகளில் எந்தவிதமான ஆபத்தும் இல்லை என தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிறுவனம் தெரிவித்துள்ளது.

சில இணையத்தளங்களில் இது தொடர்பான போலியான செய்திகள் வெளியாகி யுள்ளன என நிறுவனத்தின் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார்

இலங்கை மீனவர்களால் பிடிக்கப் படும் மீன்களில் 40 தொடக்கம் 60 சதவீதம் வரை மனித பாவனைக்கு உகந்தவை அல்ல என செய்தி வெளியாகியிருந்தது.இது தொடர்பாக, மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் தெரிவிக்கையில், தாம் அது பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிடவில்லை என அவர் குறிப்பிட்டார்.

அந்தவகையில் பிடிக்கப் படும் மீன்களில் மனிதர்கள் உண்பதற்கு ஆபத்தான வகையில் எந்த ரகமும் இல்லை.பொதுவாக மீனவர்களின் கவனவீனம் மற்றும் கடலில் இருந்து கரை திரும்புவதற்கு ஏற்படும் கால தாமதம், ஐஸ் கட்டிகளின் பற்றாக்குறை, போன்ற காரணங்களால் மீன்களோ வேறு கடலுணவுகளோ பாதிப்படையலாம். அவற்றை நாம் ஆராய்ந்து விநியோகத்திற்கு அனுப்புவதில்லை எனவும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். *(மற்றொரு செய்தி 12 ஆம் பக்கத்தில்)*



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.




## ஆறுமுகம் ஆன பொருள்

எங்கள் மரபுலகில் பல புலவர்களைப் பார்த்திருக்கிறேன். தமிழே தங்கள் உயிர் என்பது போல் உருகுவர். வள்ளுவரை வள்ளுவன் என்று யாரும் சொன்னாலே அவர்களுக்குத் தாங்காது. முக்கிய கவிதைகளைச் சொல்லும் போது ஓர் எழுத்துத் தவறினாலும் இடியோசை கேட்ட அசுணம் போல் அதிர்ந்து காட்டுவர். அப்படி நடித்த பல பேர்கள் பின்னாளில் மரபிற்கெதிரான போராட்டங்கள் தொடங்கிய போது எதிராளிகள் கையோங்க, வென்ற புதியவர்களுக்கு எப்படியெல்லாம் தமிழ்ப் புலவர்களை இழிவு செய்யலாமென, ஏடெடுத்துக் கொடுத்து எட்டப்ப வேலை செய்து இழிவு இயற்றினார்கள். புலவர்களை அவர்கள் போற்றியது வெறும் வாய்ச் சொல். வித்துவான் அவர்களுள் விதிவிலக்கானவர். தமிழ்ப்புலவர்தமை தன் குருமாராய் நினைந்தவர். அதிலும் பாரதி என்றால் அவருக்கு ஒரு தனிப்பைத்தியம். இசையில் வல்ல எங்கள் வித்துவான், ‘குஷி’ வந்து விட்டால், அபிநயத்தோடு பாரதி பாடல்களைப் பாடத் தொடங்கிவிடுவார். பாரதியும், வித்துவானுக்குக் கண்ணீர் வருவிப் போர் ‘லிஸ்டில்’ இடம்பெறுவன். அவன் தமிழால் விளைந்த உருக்கத்தால் மட்டுமல்ல, வறுமையோடு இளமையில் இறந்து போன, அவன் இழப்பு நினைத்தும் அழுவார். அவர் பாரதி மேற்கொண்ட பற்றுக் கண்டு நான் திகைத்த சம்பவம் ஒன்று சொல்கிறேன்.

★ ★ ★

பின்னாளில் தமிழ் தந்த நெருக்கத்தால் கழகம் ஒரு குடும்பம் போல் ஆகிவிட்டது. வித்துவான் முதலியோர், நாங்கள், என் இளையார் என மூன்று தலைமுறையினர் ஒன்றாயிருந்தோம். ஒரே காலத்தில் இந்தியாவில் படித்தவர்கள் என்பதால் சிவராமலிங்கம் மாஸ்ரர், வித்துவான் வேலன், வித்துவான் ஆகியோர் ஏற்கனவே உறவாய் நெருங்கியிருந்தார்கள். வித்துவான் அவர்களுள் மூத்தவர். வேலனுக்கும் அவருக்கும் நெருக்கம் அதிகம். அவர் ‘‘அண்ணை’’ என்பார், இவர் ‘‘தம்பீ’’ என்பார். வித்துவான் வேலன், சமரசம் செய்யத் தெரியாத தன் தனிப் போக்கால் உலகத்தோடு முரண்பட்டு நின்றவர். அவரை அணுகத் தமிழ் படித்தவர்களே பயப்படுவார்கள். வித்துவான் மட்டும்தான் அவருக்கு நெருக்கமானவர். வித்துவான் வேலன் அவர்களுடைய ஒரு பிறந்த தினம். நாங்கள் எல்லோரும், பருத்தித்துறையில் இருந்த வேலன் சேர் வீட்டுக்குச் சென்றோம். அது எங்கள் தாய்வீடு போல சாப்பாடு, சிரிப்பு, பேச்சு என, நாங்கள் போனால் வீடு இரண்டுபடும். வித்துவானும் எங்களோடு வந்திருந்தார். வேலன் சேரின் விருப்ப மாணக்கன் அருமைநாயகமும், திடீரென அங்கு வந்து சேர, கலகலப்பு அதிகரித்தது. அருமைநாயகம் ஒரு நாடகப் பைத்தியம். அவரைப் பற்றி முன்னொருதரம் மல்லிகையில் ‘நல்லதோர் வீணை’ என்ற தலைப்பில் எழுதியிருக்கிறேன். நாடக நினைப்பிலேயே வாழ்ந்து நாடக நினைப்பிலேயே செத்தவர். மாலை தேநீர் விருந்தின் பின்பு ஒன்று கூடினோம். பொழுது போவதற்காய் ஒருவர் பாட, ஒருவர் ஆட அருமைநாயகத்தின் ‘டேர்ன்’ வந்தது. ‘‘எனக்கு நடிக்கத்தான் தெரியும், ஆனால் சேர்ந்து நடிக்க ஒருவருமில்ல என்ன செய்யிறது.’’ என்றார். அதைக் கேட்ட வேலன் சேர் ‘‘என்ன நடிக்கப் போற, சேர்ந்து நடிக்கிறவர் என்ன செய்யவேணும், சொல்லு. இவையள் ஆரும் செய்வினம்.’’ என்று ஊக்கப்படுத்தினார். ‘‘கப்பலோட்டிய தமிழன் படத்தில சிவாஜி நடித்த ஒரு பகுதியை நடிக்கப் போறன் பெரிசா ஒன்றுமில்லை. கப்பல்



# உன்னைச் சரணடைந்தேன்

ஓட்டிய தமிழன் வீட்டில் இருக்கிறார் அப்ப அவருக்கொரு தந்தி வருகுது. அந்த இடத்தில, ஆராவது ஒருவர் ‘போஸ்மென்னாக’ வந்து, நான் நடிச்சு கொண்டு கண் காட்டேக்க, ‘சார்! தந்தி’ என்று சொல்லி, ஒரு ‘பேப்பரை’ என்னட்டை தர வேணும் மிச்சம் நான் நடிப்பன் அவளவுந்தான். ஆர் ‘போஸ்மென்னாய்’ நடிக்கப் போறியள்’’ அருமைநாயகம் எங்களைப் பார்க்க, நாங்கள் சமாளித்து நழுவினோம். வித்துவானுக்கு அன்று ‘‘குஷி மூட்’’ ‘தம்பீ நான் நடிக்கிறனடா’ என்று எழும்பி வந்தார். நாங்கள் கொண்டாட்டமானோம். அருமைநாயகம் நிலத்தில் சப்பாணி கட்டி உட்கார்ந்து ஒரு ‘பேப்பரை’ விரித்துக் கொண்டார். அவருக்கருகில் இருந்த கதிரையில் வித்துவான் வந்து உட்கார்ந்தார். அருமைநாயகம் ‘சேர்! நான் முதல் தனிய நடிப்பன், இடையில கையைக் காட்ட நீங்கள் நான் சொன்ன மாதிரி தந்தியைத் தர வேணும் விளங்குதே’ என்றார். ‘அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீர் பயப்படாமல் நடியும்’ என்ற வித்துவான், அருமைநாயகத்தின் முகம் பார்த்து உட்கார்ந்து கொண்டார். நடிப்புத் தொடங்கியது. சிறையிலிருந்து வெளிவந்த கப்பல் ஓட்டிய தமிழன், பத்திரிகைச் செய்திகளை ஒவ்வொன்றாய்ப் பார்த்து, தன் அபிப்பிராயங்களை வெளியிடுவதாய், அருமைநாயகம் நடிக்கத் தொடங்கினார். நாங்கள் எல்லாம் ஆர்வமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தோம். நேரம் வந்தது. வித்துவான் தன்னை மறந்து, அருமைநாயகத்தின் நடிப்பைப் பார்த்துக் கொண்டிருக்க, அருமைநாயகத்திற்கு எரிச்சல். ‘சேர்! தந்தியைக் கொண்டு வாங்க?’ மெல்லிய குரலில் சொல்லிவிட்டு நடிப்பைத் தொடர்ந்தார். வித்துவான் உஷாரானார். கதிரையிலிருந்து எழும்பினார் நாலடி தள்ளிப் போய் நின்று கொண்டு, நிமிர்ந்து சால்வையை இழுத்து விட்டுக் கொண்டார். வித்துவான் நடிக்கப் போகிறார் என்றதும் எங்களுக்குப் பெரிய குதூகலம். வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு எல்லோரும் அவரையும் அருமைநாயகத்தையும் வைத்த கண் வாங்காமற் பார்த்தோம். தூரச் சென்ற வித்துவான் அணி வகுப்பு நடையில், அருமைநாயகத்திற்கு அருகில் வந்தார். தொண்டையை செருமினார். எங்கள் எல்லோரையும் ஒரு தரம் பார்த்தார். வெடிக்கத் தயாராகியிருந்த சிரிப்பை சிரமப்பட்டு எல்லோரும் அடக்கிக் கொண்டோம். கப்பலோட்டிய தமிழனாய் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த அருமைநாயகத்திற்கு அருகில் வந்து, ‘‘சார்! தந்தி’’ என்று உரத்துச் சொல்லி கையிலுள்ள பழம் பேப்பரை அருமைநாயகத்திடம் கொடுத்தார். அவர் கொடுத்த பழம் பேப்பரை தந்தியாய் வாங்கிய அருமைநாயகம் அதைப் பிரித்தார். ஒரு நிமிடம் அவர் முகத்தில் பல உணர்ச்சிகள். முகம் சுருங்க கண்களின் சோகம். மெல்லிய விம்மல், ‘பாரதீ! நீயும் என்னை தனியனாய் விட்டுவிட்டுச் சென்றாயா?’ என்று சொல்லி மெல்ல குலுங்கத் தொடங்க ‘என்னது, பாரதி செத்திட்டானா? ஐயோ!’ என்று ஒரு குரல். குரல் வந்தது அருமைநாயகத்திடமிருந்து அல்ல, வித்துவானிடமிருந்து. ‘பாரதி நீ போய் விட்டாயா?’ என்று அருமைநாயகம் கப்பலோட்டிய தமிழனாய்ச் சொல்ல, அடுத்த நிமிடம் அந்தக் காலத்திற்கே வித்துவான் போய் விட்டார். பாரதி இறந்த செய்தியை அவரால் தாங்க முடியவில்லை. கதறி அழத்தொடங்கி விட்டார். சிரிக்கத் தயராயிருந்த நாம் எல்லோரும் பாரதிக்காய் அழும் வித்துவானைப் பார்த்து விக்கித்துப் போனோம். அன்று அவர் அழுகை நிற்க இரவாகிவிட்டது.

★ ★ ★

சான்றோரிடம் பகையற்ற கோபம் என்ற ஒன்று இருக்கிறது. அதை விளங்குவது மிகக் கடினம். முதல் நாள் போர் முடிந்து தோற்றுவந்த இராவணன், இராமன் வந்த போது, கூனிமேற் மண் உருண்டை அடித்த குழந்தை இராமனின் முகமே, போர்க்களத்தில் தன்மேல் அம்பு போட்ட இராமன் முகத்தில் தெரிந்தது என்கிறான். **போருக்கு நின்றிடும்போதும், மனம் பொங்கலில்லாத, அமைதி மெய்ஞ்ஞானம்** என்று, பாரதி பேசுவதும் இதைத்தான் **பகைவனுக்கு அருள்வாய் நன்நெஞ்சே!** என்ற பாரதியின் கூற்று, மேலே சொன்ன மெய்ஞ்ஞானம் பெற்றார்க்கே கைவரும். அந்த மெய்ஞ்ஞானத்தை வித்துவானிடம் கண்டு சிலிர்த்திருக்கிறேன். தமிழும் ஓர் உறவு தான் என்பார்கள். அவ்வுண்மையை நான் விளங்கிச் சிலிர்த்த சம்பவம் அது. சொல்கிறேன்.

★ ★ ★

யாழ்ப்பாணத்தில் மரபுத் தமிழ் படித்தோரில் இரண்டு குழுவினர்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 112

இருந்தனர். ஒரு குழுவினர் தமிழகம் சென்று தமிழ் கற்றவர்கள். மற்றைய குழுவினர் நம்மண்ணிலேயே தமிழ் கற்றவர்கள். இவ்விருசாராருக்கும் இடையில் ஓர் மெல்லிய பகைப் பதிவு இருந்தது. வெளிப்படையாய்க் காட்டாவிட்டாலும் உள்ளூர இவர்களிடையே குழுமனப்பான்மை இருந்தது உண்மை. ஈழத்தார் குழுவிற்குத் தலைமை தாங்கியவர் இலக்கியகலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள். இந்திய அறிஞர்களுடன் மோதும் மனப்பான்மை அவரிடம் இருந்தது. அந்த மனப்பான்மையால் இந்தியா சென்று கற்றுவந்த அறிஞர்களை அவர் பெரிதாய் அங்கீகரிப்பதில்லை. அங்கு பேறறிஞர்களிடம் கற்றுவந்தவர்களும் இவர் போக்கிற்கு உடன்படுவதில்லை. மூளத்தீ போல் உள்ளே கிடந்த இப் பகையை எங்கள் இரண்டு வித்துவான்களும் உரையாடும்போது அறிந்திருக்கிறேன். நாங்கள் ஒன்றாய் இருக்கும் போது பண்டிதமணியின் சில குறைபாடுகளை அவர்கள் கிண்டலாய்ப் பேசுவார்கள். அக்கிண்டல் இரசிக்கத்தக்கதாய் இருக்கும். எங்கள் முகத்தில் இரசனை தெரிந்ததும் வித்துவான் வேலன் ஒரு செய்தியை அழுத்திச் சொல்லுவார். ‘நாங்கள் கதைக்கிறது தான் பண்டிதமணி என்று நினைச்சிடாதிங்கோ, இது ஒரு பக்கந்தான். அவற்ற மற்ற பக்கம் ஆச்சரியமானது. அதை நீங்கள் தெரிஞ்சு கொள்ள வேணும்’ என்பார். தமக்குப் பிடிக்காதவராய் இருந்த போதும் ஒருவரின் நன்மை, தீமை இரண்டையும் காட்டும் அவர்களின் அப்பண்பாடு எனக்கு நிரம்பப் பிடிக்கும். இன்றைய கல்வி உலகத்தார் படிக்க வேண்டிய பாடம் அது. மரபாரிடம் அழுக்குச் சேர்ந்து விட்டதாய்ச் சொல்லி, புதுமை செய்ய வந்த நவீன அறிஞர் பலர், தன் குழுவிற் சேராதாரை, பெரும் ஆற்றல் இருந்தும் நசுக்கி ஒதுக்கிய செய்தி வரலாறு. மஹாகவி அவ்வரலாற்றின் சான்றாவார். இன்றுவரை பல்கலைக் கழகங்களில் அப்பண்பாடு தொடர்கிறது. இலக்கிய உலகிலுந்தான். இவர்கள் இளையாரிடமும் இந்த இழிவை ஏற்றுகிறார்கள். மாறுபட்டாரிடம் உள்ள ஆற்றலை மதிக்குந்திறன், அறிவுலகின் வளர்ச்சிக்கு அவசியமானது. மதித்ததோடு அல்லாமல், அன்பு செய்யவும் கற்றுத்தந்தார் வித்துவான். அதைச் சொல்கிறேன்.

★ ★ ★

(தொடரும்...)

# மக்களுக்கு தேவையான அபிவிருத்தித் திட்டங்கள் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்படும்!

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

ஊழல், மோசடிக்கு எதிரான தமது கொள்கையில் எவ்வித மாற்றமும் கிடையாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மேலும், மக்களுக்குத் தேவையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மோசடிகள் இடம்பெறாத வகையில் உரிய முறையிலும் வெளிப் படைத் தன்மையுடனும் நடைமுறைப் படுத்தவுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலன்னறுவை கிரித்தலே குடியேற்றத்தில் உள்ள கனிஷ்ட வித்தியாலயத்தின் புதிய வகுப்பறைக் கட்டடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் முற்பகல் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

'எழுச்சிபெறும் பொலன்னறுவை' மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 06 மில்லியன் ரூபா செலவில் இந்த புதிய வகுப்பறைக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு சென்ற ஜனாதிபதியை, மாணவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். நினைவுப் பலகையை திரை நீக்கம்செய்து வகுப்பறைக்



கட்டடத்தை மாணவர்களிடம் கையளித்த ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட விருந்தினர் புத்தகத்தில் நினைவுக் குறிப்பொன்றை பதிவு செய்தார்.

ஜனாதிபதியின் வருகையை நினைவுகூரும் வகையில் பாடசாலை வளாகத்தில் நாக மரக்கன்று ஒன்று நடப்பட்டது.

அகில இலங்கை பாடசாலை பாடல் போட்டியில் ஆரம்பப் பிரிவு குழுப் பாடல் போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்ட பாடசாலையின் பாடல் அணிக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும் ஜனாதிபதி வழங்கினார்.

இந்த நிகழ்வில், மகா சங்கத்தினர் உட்பட பொலன்னறுவை மாவட்ட செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, ஹிங்குராங்கொடை வலய கல்விப் பணிப்பாளர் என்.எம்.எம்.கே. நவரத்ன, பாடசாலை அதிபர் வீ.என்.ரணவீர உள்ளிட்ட ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# பொலன்னறுவை மாவட்டத்தில் 123 குளங்கள் புனரமைப்பு

கொழும்பு, மார்ச் 03

பொலன்னறுவை மாவட்டத்தில் மட்டும் 123 குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன என ஜனாதிபதி மைத்திரி தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை ஹிங்குராங்கொடை யோதலை மகா வித்தியாலயத்தின் இரண்டுமாடி வகுப்பறைக் கட்டடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன் தினம் இடம் பெற்றது.

'எழுச்சிபெறும் பொலன்னறுவை மாவட்ட' அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 11.45 மில்லியன் ரூபா செலவில் இந்தப் புதிய வகுப்பறைக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை விமானப் படையினர் அதற்கான மனித வள பங்களிப்பையும் வழங்கியுள்ளனர்.

பாடசாலைக்குச் சென்ற ஜனாதிபதியை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்து வகுப்பறைக் கட்டடத்தை மாணவர்களிடம் கையளித்த ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட விருந்தினர் புத்தகத்தில் நினைவுக் குறிப்பொன்றையும் பதிவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் விவசாய சமூகத்திற்கு முன்னைய எந்த அரசும் மேற்கொள்ளாத நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தி உலர் வலயத்தில் 2400 குளங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் இந்த வருடம் ஆரம்பிக்கபடும்.

இதன் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் மட்டும் 123 குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. 60 வருடங்களுக்கும் மேலாக மாவட்டத்தில் உள்ள மக்கள் முகங்கொடுத்த நீர் தொடர்பான பிரச்சினைகள் இந்த வருட இறுதிக்குள் நிரந்தரமாக தீர்த்துவைக்கப்படும்.

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள 240 பாடசாலைகளில் 142 பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடங்களை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வுகளுக்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறைக்கு தேவையான வசதிகளை வழங்குவதைப்போன்று பரீட்சைகளில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் உள்ள பலவீனங்களை இனங்கண்டு மாணவர்கள் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், மகா சங்கத்தினர் உட்பட பொலன்னறுவை மாவட்ட செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, அரசாங்க அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(கு)

# மீன்பிடித்துறை சட்டமூலம் விரைவில் அமைச்சரவைக்கு!

தேசிய மீன்பிடித்துறை சார்ந்த சட்ட மூலத்தை இம்மாத இறுதிக்குள் அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

இதற்கான அறிவுறுத்தலை கடற்றொழில் நீரியியல்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர உரிய அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சை முறையாக முன்



னெடுத்துச் செல்வதே, இந்த தேசிய மீன்பிடி சட்டமூலத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த விடயம் தொடர்பான சட்டமூல பிரேரணையை தயாரிப்பதற்கு நோர்வே அரசின் பூரண ஆதரவு கிடைத்துள்ளது.

இந்த சட்டமூல ஆக்கத்திற்கென உரிய தரப்பினர் மற்றும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளும் கிடைத்துள்ளன.

# லண்டனில் இருந்து கொழும்பு வந்த விமானம் ஜேர்மனியில் அவசரமாக தரையிறக்கப்பட்டது!

கொழும்பு, மார்ச் 03

லண்டனில் இருந்து கொழும்பு நோக்கி வந்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யூ.எல்.504 விமானம் நேற்றுமுன்தினம் இரவு ஜேர்மனியின் பிராங்க் போர்ட் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் பயணம் செய்த பயணி ஒருவருக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாவே விமானம் ஜேர்மனியில் தரையிறக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விமானம் பிராங்க்போர்ட் விமான நிலையத்தில் தரையிறக்கப்படும் போது, இரவில் விமான நிலையம் மூடும் நேரம் என்பதால் விமான நிலையம் மீண்டும் திறக்கப்படும் வரை விமானம், அந்த விமான நிலையத்திலேயே தரித்திருக்க நேரிட்டுள்ளது என ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவித்துள்ளது.

இதனிடையே கொழும்பு - சென்னை மற்றும் கொழும்பு-டில்லிக்கு இடையிலான விமான சேவைகள் வழமைபோல் இடம்பெறும் எனவும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

**கடல் ஆராய்ச்சி நிறுவனம்**

# இலங்கையில் மீன் உண்பவர்களுக்கு எச்சரிக்கை!



இலங்கையில் பிடிக்கப்படும் சில மீன் வகைகளை உண்ண வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்களால் பிடிக்கப்படும் 40 முதல் 60 வீதம் வரையிலான மீன் வகைகள் உண்பதற்கு பொருத்த மற்றவை என கடல் ஆராய்ச்சி நிறுவனமான நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது என மீன் பிடித்துறை மற்றும் நீரியல் வள அமைச்சு தகவலை வெளியிட்டுள்ளது.

அண்மையில் நாரா நிறுவனம் இது தொடர்பிலான ஆய்வுகளை நடத்தியுள்ளது. இந்த வகை மீன்கள் கருவாட்டுக்கும் பொருத்தமற்றவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்வாறான மீன் வகைகளைப் பிடிப்பதைத் தடுக்கும் வகையில் மீனவர்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. நவீன படகு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், தரமான ஐஸ் மற்றும் நீர் பயன்பாடு, நவீன தொழில் நுட்பத்தில் மீன்களை பிடித்தல், மீன்களை இறக்குமதி செய்வது குறித்த நவீன முறைகளை அறிமுகம் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மொத்த தேசிய உற்பத்தியில் மீன் பிடித்துறையினால் குறைந்த அளவு பங்களிப்பே வழங்கப்படுவதாகவும் இந்தப் பங்களிப்பு அதிகரிக்கப்படவுள்ளதாகவும் மீன் பிடித்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

# தீட்சை பெறலாம்

கோப்பாய், மார்ச் 03

உலக சைவத் திருச்சபையின் ஏற்பாட்டில் யாழ். கல்வியியற் கல்லூரியில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறும்.

இதில் திருச்சபை அங்கத்தவர்கள் மற்றும் சைவ சமயிகள் கலந்து கொண்டு தீட்சை பெற்றுக் கொள்ள முடியும் எனத் திருச்சபை அறிவித்துள்ளது.

(இ)

வினாத்தாள் 17 பகுதி II இன் தொடர்ச்சி...

29. 

உருவில் உள்ளவர்
1. கலாயோகி ஆனந்தகுமாரசாமி
2. சேர் டீ.பி.ஜயதிலக்க
3. கலாநிதி ரீ.பீ. ஜாயா
4. அநகாரிக தர்மபாலா

30. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மிக உகந்த உணவு
1. பாண் 2. மரவள்ளி 3. நூடில்ஸ் 4. குரக்கன்

(30 புள்ளிகள்).

## பழமொழிகள்

உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை.
உடம்பு போனால் போகிறது கை வந்தால் போதும்.
உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா
உடையவன் பாரா வேலை ஒரு முழங் கட்டை.
உடைத்த சங்கு ஊத்துப் பறியுமா?
உண்ட உடம்பிற்கு உ30.றுதி, உழுத புலத்தில் நெல்லு.
உட்கார்ந்தால் அல்லவா படுக்க வேண்டும்.
உண்டு கொழுத்தால் நண்டு வலையில் இராது.
உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
உண்ணீர் உண்ணீரென்றே ஊட்டாதார் தம் மனையில் உண்ணாமை கோடி பெறும்.
உத்திராடத்தில் ஒரு பிள்ளையும், ஊர் வாரியில் ஒரு நிலமும்.
உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.
உரலில் அகப்பட்டது உலக்கைக்கு தப்புமா?
உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
உழக்கு மிளகு கொடுப்பானேன், ஒளிந்திருந்து மிளகு சாரு குடிப்பானேன்
உலை வாயை மூடினாலும் ஊர்வாயை மூடேலாது.
உலோபிக்கு இரட்டை செலவு.

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 15 விடைகள் (பகுதி - 01)

| | | | |
|---|---|---|---|
| 1.2 | 13.3 | 23.1 | 37.1 |
| 2.3 | 14.1 | 24.2 | 38.3 |
| 3.3 | 15. | 25.3 | 39.2 |
| 4.2 | 1.2 | 26.2 | 40.3 |
| 5.3 | 2.3 | 27.3 | 41.1 |
| 6.1 | 16.2 | 28.3 | 42.2 |
| 7.3 | 17.1 | 29.1 | 43.2 |
| 8.2 | 18.3 | 30.2 | 44.3 |
| 7.1 | 19.3 | 31.3 | 45.1 |
| 8.2 | 20. 1.2 | 32.1 | 46.3 |
| 9.3 | 2.2 | 33.2 | 47.2 |
| 10.2 | 21.3 | 34.3 | 48.2 |
| 11.3 | 22.2 | 35.3 | 49.3 |
| 12.2 | | 36.2 | 50.3 |







# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் வினாத்தாள் 17
பகுதி – II நேரம்– 1 மணித்தியாலம் 15 நிமிடம்

வினாத்தாள் 17 பகுதி II இன் தொடர்ச்சி...

16 2. காயாக இருக்கும்போதும் காய்ந்த பின்னரும் பச்சை நிறமாக இருக்கும் வித்து
1. கௌபி 2. கடலை 3. கச்சான் 4. பயறு

3. பின்வருவனவற்றுள் மூன்று இதழ்களைக் கொண்ட பூக்களின் தொகுதி
1. தென்னை, போகன்விலா 2. நித்தியகல்யாணி, செவ்வரத்தை
3. எக்சோறா, மல்லிகை 4. சூரியகாந்தி, போகன்விலா


4. பயிர்களைச் சேதப்படுத்தும் நத்தைகளைப் பிடித்து உண்ணும் பிராணி
1. காட்டுக்கோழி 2. குந்துகாலி 3. மரநாய் 4. செண்பகம்

5. தையல் வேலையின் போது ஊசி குத்தாதிருக்கப் பயன்படுத்தப்படும் உபகரணம்.
1. கையுறை 2. தீதாள் 3. சுவடு வரை சில்லு 4. பெரிய ஊசி


6. நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கும் உணவுகளாக இருப்பவை.
1. வல்லாரை, பொன்னாங்கண்ணி 2. அவரை, கடலை
3. உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு 4. இறைச்சி, முட்டை

7. "மணியாசு" எனும் கருவியைப் பயன்படுத்தும் தொழிலாளர்
1. பொற்கொல்லர் 2. கொத்தன் 3. தச்சன் 4. உழவன்

8. பின்வரும் மின் இணைப்புத் தொகுதிகளில் மின்குமிழ் ஒளிரக்கூடிய இணைப்பு எது?





9. தரப்பட்டுள்ள படம் குறித்து நிற்பது



1. புகையிரதக் கடவை
2. பாதுகாப்புடைய புகையிரதக் கடவை
3. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை
4. புகையிரத நிலையம்

10. சரியான கொண்ணிலை கொண்ட பாதச் சுவடுகள்




11. கடதாசி ஒன்றை மடித்துச் செய்யும் ஆக்கம்

1. கொலாஜ் 2. அல்பானா 3. ஒரிகாமி 4. கிறுக்கல் சித்திரம்

12. வேலை ஒன்றைக் கூட்டாகச் செய்வதால் கிடைக்கும் நன்மை அல்லாதது.


1. வேலையை இலகுவாகச் செய்யலாம் 2. நீண்ட நேரம் எடுக்கும்
3. மகிழ்ச்சியாக வேலை செய்ய முடியும். 4. ஒற்றுமை உணர்வு அதிகரிக்கும்.

13. காந்தம் ஒன்றினால் கவரக்கூடிய பொருட்களின் தொகுதியாக இருப்பது.

1. குண்டூசி, இரும்பு ஆணி 2. இரும்பாணி, றபர்பான்ட்
3. சில்வர் கோப்பை, அலுமினியக் கோப்பை 4. பிளாஸ்ரிக் கரண்டி, தக்கை

14. இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களுள் ஆங்கிலேயர்களால் "தேசத்துரோகி" என பிரகடனப்படுத்தப்பட்டவர் யார்?

1. சேர்.பொன்.இராமநாதன் 2. கொங்காலேகொட பண்டா
3. கெப்பட்டிப்பொல திசாவை 4. சித்திலெப்பை

15. 

இவ்வுரு எதனைக் காட்டுகின்றது?

1. கவனமாகக் கையாளவும் 2. உடையக் கூடியது
3. பாரமானது 4. இப்பக்கம் மேலே

16. இலங்கையின் தேசிய மலர்

1. தாமரை 2. அலரி 3. செவ்வந்தி 4. அல்லி

17. தேசப்படத்தில் புகையிரதப் பாதையைக் குறித்துக்காட்டப் பயன்படும் நிறம்.

1. சிவப்பு 2. கறுப்பு 3. நீலம் 4. மஞ்சள்

18. அரச இலச்சினையில் மலர் இதழ் குறித்து நிற்கும் பொருள்

1. தர்மம் 2. தூய்மை 3. உலக நிலைப்பாடு 4. சௌபாக்கியம்





19. தென்மாகாணக் கடலில் கலக்கும் நதி.

1. வழுக்கியாறு 2. தெதுறுஓயா 3. ஜின் கங்கை 4. மகாவலி கங்கை

20. குருநாகல் மாவட்டம் அமைந்துள்ள மாகாணம்

1. வடமாகாணம் 2. வடமேல் மாகாணம் 3. தென்மாகாணம் 4. வடமத்திய மாகாணம்

21. அவுஸ்ரேலியாவின் தேசிய சின்னம்

1. காட்டுக்கோழி 2. பண்டா 3. கழுகு 4. கங்காரு

22. இந்தியாவிற்கு தெற்கில் அமைந்துள்ள நாடு?


1. தாய்லாந்து 2. இலங்கை 3. சீனா 4. ஜப்பான்

23. உணவாகப் பயன்படும் வித்து அல்லாதது.

1. பப்பாசி 2. சோளம் 3. நெல் 4. பாசிப்பயறு

24. உலகிலுள்ள மொத்த நீர்ப்பரப்பில் நன்னீராகக் காணப்படும் நீரின் சதவீதம் யாது?

1. 97% 2. 2% 3. 1% 4. 3%

25. 


இப்படம் குறித்து நிற்பது

1. நீர்வடிகட்டி 2. மழைமானி
3. மண்ணின் பகுதிகள் 4. புனலும் நீரும்

26. புதுவருடத்தில் கிணற்றுடன் கொடுக்கல் வாங்கல் செய்து கொள்ளும் சம்பிரதாய நடைமுறையைக் கொண்டவர்கள்.

1. தமிழர் 2. சிங்களவர் 3. முஸ்லீம்கள் 4. வேடுவர்

27. சூழலில் உள்ள அழுக்குகளை சுத்தப்படுத்தும் பிராணி

1. கிளி 2. மைனா 3. காகம் 4. செண்பகம்

28. 

இவ்வுருவில் உள்ள உபகரணத்தைப் பயன்படுத்துவதன் மூலம்

1. காற்று வீசும் திசையை அறியலாம்
2. காற்றின் கதியை அறியலாம்
3. வானிலை பற்றி முன்கூட்டியே அறியலாம்
4. விமானத்தின் தரை இறக்கத்தை அறியலாம்.

# செயற்கைக்கோள்களை ஏவும் உலகின் மிகப் பெரிய விமானம்

கலிபோர்னியா,பெப்.03

அமெரிக்காவில் உள்ள தனியார் விமான நிறுவனம் செயற்கைக்கோள்களை விண்ணுக்குச் செலுத்தும் வகையில் உலகின் மிகப்பெரிய விமானத்தை உருவாக்கி உள்ளது.

அமெரிக்காவில் உள்ள தனியார் நிறுவனம் உலகின் மிகப் பெரிய விமானத்தை உருவாக்கி சாதனைப்படைத்துள்ளது. இந்த விமானம் செயற்கைக்கோள்களை விண்ணுக்குச் செலுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.



இரட்டை உடற்பகுதி கொண்ட இந்த விமானத்தின் இறக்கைகள் உதைபந்து மைதானம் அளவிற்கு மிக நீளமாக உள்ளன.

ஸ்ட்ரடோலாஞ்ச் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விமானம் 250 தொன் எடை மற்றும் 117 மீற்றம் நீளம் கொண்டது. 6 மிகப்பெரிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதில் 6 எரிபொருள் தொட்டிகள் உள்ளன. அவை அனைத்தும் தனித் தனியாக நிரப்பப்பட்டு சரியாக செயற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விமானத்தைக் குறைந்த வேகத்தில் இயக்கி வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. முழுச் சோதனை முடிவடைந்த பின் வருகின்ற ஜூன் மாதம் தொடக்கத்தில் ஸ்ட்ரடோலாஞ்ச் விமானம் பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (பு)

## வெள்ளை மாளிகை தகவல் தொடர்பு இயக்குநர் ராஜினாமா!

வொஷிங்டன்,பெப்.03

அமெரிக்க ஜனாதிபதியின் வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் தகவல் தொடர்பு இயக்குநராகப் பணியாற்றி வந்த பெண் ஹோப் கிக்ஸ் திடீரென பதவி விலகியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் தகவல் தொடர்பு இயக்குநராகப் பணியாற்றி வந்த பெண், ஹோப் கிக்ஸ். மூத்த அதிகாரியான இவர், ஜனாதிபதி ட்ரம்பிடம் நீண்ட காலமாக ஆலோசகராகப் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். இவர் திடீரென பதவி விலகியுள்ளார்.



இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், என் நன்றியை ஜனாதிபதி ட்ரம்புக்குத் தெரிவிப்பதற்கு வார்த்தை இல்லை. இந்த நாட்டை சிறப்பாக தொடர்ந்து வழிநடத்திச்செல்வதற்கு ட்ரம்புக்கும், அவரது நிர்வாகத்துக்கும் எனது வாழ்த்துக்கள் எனக் கூறி உள்ளார்.

வெள்ளை மாளிகையில் தகவல் தொடர்பு இயக்குனர் பதவியில் இருந்து இவர் விலகி இருப்பது, ஜனாதிபதி ட்ரம்புக்கு பின்னடைவாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவில் 2016ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில், ரஷ்யாவின் தலையீடு இருந்தது என எழுந்துள்ள குற்றச்சாட்டு பற்றி நாடாளுமன்ற பிரதிநிதித்துவச் சபையின் உளவுக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

அந்தக் குழுவின் முன் ஹோப் கிக்ஸ் ஆஜராகி சாட்சியம் அளித்து உள்ள நிலையில், பதவி விலகி இருக்கின்றமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஐரோப்பா பகுதிகளை தாக்கியது பனிப்புயல்

## 55 பேர் பரிதாபமாக உறைந்து சாவு

பரிஸ்,பெப்.03

ஐரோப்பாவில் நிலவி வரும் பனிப்பொழிவு மற்றும் பனிப்புயலின் தாக்கத்தினால் 55இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். விமானப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளில் கடும் குளிர் நிலவி வருகிறது. பனிப்புயல் மற்றும் கடும் பனிப் பொழிவால் அனைத்து வீதிகள், ரயில் சேவைகள் மற்றும் பாடசாலைகள் மூடப்பட்டன. மேலும் நூற்றுக் கணக்கான விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மத்திய தரைக்கடலின் தெற்கு பகுதி வரை இந்த வழக்கத்திற்கு மாறான குளிர் உணரப்பட்டது.

கடும் குளிரால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55 ஆக உயர்ந்துள்ளது. போலந்தில் மட்டும் 21பேர் உயிரிழந்துள்ளனர். ஸ்லோவேகியாவில் 7 பேர் இறந்துள்ளனர். ஏழைகள், வீடற்றவர்கள், மற்றும் குடியேறிகள் இந்த மிகப்பெரிய பனிப்புயலால் பாதிக்கப்படுவார்கள் எனவும், முதியவர்கள், குழந்தைகள், நீண்ட காலமாக நோயால் பாதிக்கப்பட்டு வருபவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனநிலை குறைபாடு உள்ளவர்கள் குளிர் தொடர்பான உபாதைகளுக்கு உள்ளாகும் ஆபத்து அதிகமாக உள்ளது என உலக சுகாதார நிறுவனம் அறிக்கை விடுத்துள்ளது.






பனிப்புயல் காரணமாக அயர்லாந்தின் டப்ளின் விமான நிலையத்தில் அனைத்து விமானங்களும் ரத்து செய்யப்பட்டன. இதேபோல் அம்ஸ்டர்டாம் ஷிபோல் விமான நிலையத்திலும் பல்வேறு விமானங்கள் இயக்கப்படவில்லை.

ஒருபுறம் பனிப்பொழிவினால் பொதுவாழ்க்கை முடங்கியிருந்தாலும், சில பகுதிகளில் பொது மக்கள் பனிச்சூழலை உற்சாகமாக அனுபவித்து வருகின்றனர்.

சில பகுதிகளில் ஐஸ்ஸ்கேட்டிங் சக்கரங்களை அணிந்து கொண்டு ஸ்கேட்டிங் செய்வதையும் காண முடிகிறது. ஆனால், தண்ணீர் சரியாக உறையாத பகுதிகளில் இவ்வாறு ஸ்கேட்டிங் செய்வது ஆபத்தை ஏற்படுத்தலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில தினங்களில் வெப்ப நிலை சிறிது அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. பனிப் புயல் கடந்து செல்லும் வரை மக்கள் வெளியே வருவதை தவிர்க்குமாறு அயர்லாந்து பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். (பு)

# அசர்பைஜான் நாட்டின் மறுவாழ்வு மையத்தில் தீ

## 30 பேர் கருகி உயிரிழப்பு

அசர்பைஜான் தலைநகர் பாகுவில் செயற்பட்டு வரும் போதை மறுவாழ்வு மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 30 பேர்வரை பலியாகினர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அசர்பைஜான் நாட்டு தலைநகராக உள்ளது பாகு. இந்த நகரில் போதை மறுவாழ்வு மையம் ஒன்று செயற்பட்டு வருகிறது. அங்கு ஏராளமானோர் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.



இந்நிலையில், நேற்றுக்காலை அந்த போதை மறுவாழ்வு மையத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தகவலறிந்து தீயணைப்பு படையினர் அங்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். மேலும், மீட்புப் படையினரும் அங்கு சென்று மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர்.

இந்தத் தீ விபத்தில் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த 30இற்கும் மேற்பட்டோர் தீயில் சிக்கி உடல் கருகி பரிதாபமாக இறந்தனர். மேலும், பலர் படுகாயம் அடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகிலுள்ள மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என மீட்புப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பப்புவா நியூகினியாவில் நிலநடுக்கம்: சாவு எண்ணிக்கை 31 ஆக உயர்வு

சிட்னி,மார்ச்.03

பப்புவா நியூகினியாவில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பசிபிக் தீவு நாடான பப்புவா நியூகினியாவின் போர்கேரா மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.5 ஆகப் பதிவானது.

இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக உடனடித் தகவல் ஏதும் வெளியாகவில்லை.

இதற்கிடையே, இந்த நிலநடுக்கத்தில் சிக்கி 13 பேர் பலியாகினர் என பப்புவா நியூகினியா அரசு முதல் கட்டமாக தகவல் தெரிவித்திருந்தது.



இந்த நிலையில், பப்புவா நியூகினியாவில் திங்கட்கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (பு)

# சத்தீஸ்கரில் 10 நக்சலைட்டுகள் சுட்டுக் கொலை



## பாதுகாப்புப் படை அதிரடி

ராய்ப்பூர்,மார்ச் 03

சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்பு படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் 10 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் பீஜப்பூர் மாவட்டத்தில் புஜாரி கங்கர் பகுதியில் உள்ள வனப்பகுதியில் நக்சல்கள் சிலர் பதுங்கியுள்ளனர் எனப் பாதுகாப்புப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, தெலுங்கானா பொலிஸாரும், சத்தீஸ்கர் பொலிஸாரும் இணைந்து அந்தப் பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு பதுங்கியிருந்த நக்சல்கள் பொலிஸார் மேல் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து, நடத்திய எதிர்த் துப்பாக்கிச் சூட்டில் 10 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டுள்ளனர். (ப)

# ஏலத்தில் ஸ்ரீதேவி வரைந்த ஓவியம்



புதுடெல்லி,மார்ச்03

நடிகை ஸ்ரீதேவி வரைந்த ஓவியத்தை டுபாயில் ஏலம் விட தொண்டு நிறுவனத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

மறைந்த நடிகை ஸ்ரீதேவி 50 ஆண்டுகள் திரையுலகில் இருந்துள்ளார். குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி மொழிகளில் 300இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். கதாநாயகியாக அறிமுகமான காலத்தில் அதிக சம்பளம் வாங்கிய நடிகை என்ற பெயரும் இருக்கிறது.

தற்போது ஸ்ரீதேவி இறந்த நிலையில் அவர் பற்றிய பலபுதிய தகவல்கள் வெளியாகிவருகின்றன. வெளியில் தெரியாமல் நிறையப் பேருக்கு உதவிகள் செய்தார் எனவும், மருத்துவ சிகிச்சைகளுக்கு உதவினார் எனவும் இணையதளங்களில் பலர் கருத்துகள் பதிவிட்டுவருகிறார்கள். அதுமட்டுமின்றி ஓவியம் வரைவதிலும் ஸ்ரீதேவிக்கு ஈடுபாடு இருந்துள்ளது.

வீட்டில் ஓய்வாக இருக்கும்போது இயற்கைக் காட்சிகள், தலைவர்கள் மற்றும் பெண்கள் படங்களை ஓவியமாகத் தீட்டி வைத்துள்ளார். உயிருடன் இருந்தபோது தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு, தான் வரைந்த பெண் ஓவியம் ஒன்றை வழங்கி இருக்கிறார். அந்த ஓவியத்தை டுபாயில் ஏலம் விட தொண்டு நிறுவனத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். ஏலத்துக்கு வர இருக்கும் அந்த ஓவியம் சமூக வலைதளங்களில் தற்போது வைரலாகி வருகிறது. (ப)

# அரசியலில் தி.மு.கவும் அ.தி.மு.கவும் தேவை

சென்னை,மார்ச்03

மதவாத சக்திகளை முறியடிக்க தமிழக அரசியல் களத்தில் தி.மு.கவும், அ.தி.மு.கவும் தேவை என்று மு.க.ஸ்டாலினின் பிறந்த நாள் விழாவில் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தென்சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மு.க.ஸ்டாலினின் பிறந்த நாள் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது இதில் விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் பேசியதாவது:-

தி.மு.க. என்ற பேரியக்கத்தை முடித்து வைக்க பலர் கங்கணம் கட்டி அலைகிறார்கள். அண்ணாவின் அறிவுபூர்வமான தலைமையின் கீழும், எத்தனையோ நெருக்கடிகளைச் சந்தித்து இந்த இயக்கத்தை கட்டிக்காத்த கலைஞர் தலைமையின் கீழும், இப்போது பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் ஆற்றல் மிக்க தலைமையை தி.மு.க. பெற்றுள்ளது. அதனால் தான் ஒழிக்க பார்க்கிறார்கள். அதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.



திருமாவளவன் தெரிவிப்பு

அடுத்து தி.மு.க. ஆட்சியை பிடித்துவிடும் என்பதற்காக இப்போது தீவிரமாக எதிர்க்கிறார்கள்.

இந்த மண்ணில் சமூக நீதியும், இட ஒதுக்கீடும் நிலைக்க தி.மு.க. பாதுகாக்கப்பட வேண்டும். ஆட்சிக்கு வராமலே சமஸ்கிருதத்தை திணிக்கிறார்கள். வந்தால் என்ன ஆகும்? தி.மு.க.வோடு கொள்கை முரண்பாடு இருந்தாலும் மதச்சார்பின்மை, மத வாதம் என்ற கோணத்தில் அணுக வேண்டும். எனவேதான் எல்லோரும் ஒரே அணியில் திரண்டு இருக்கிறோம்.

வருகிற தேர்தலோடு தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் முற்றுப்புள்ளி வைக்கக் காய் நகர்த்துகிறார்கள். மதவாத சக்திகளை முறியடிக்க தமிழக அரசியல் களத்தில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ப)


# இயேசுநாதர் பற்றி காந்தி எழுதிய கடிதம் ஏலத்தில்

வொஷிங்டன் ,மார்ச்03

மகாத்மா காந்தி, சபர்மதி ஆசிரமத்தில் இருந்து அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்தவர் மில்டன் நியூபெர்ரி பிராண்ட்ஸுக்கு எழுதிய கடிதத்தில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி எழுதியுள்ளார். இந்தக் கடிதம் தற்போது ஏலத்திற்கு வருகிறது.

மகாத்மா காந்தி, சபர்மதி ஆசிரமத்தில் இருந்து அமெரிக்காவை சேர்ந்த கிறிஸ்தவர் மில்டன் நியூபெர்ரி பிராண்ட்ஸுக்கு ஒரு கடிதம் எழுதினார். தட்டச்சு செய்து, கையெழுத்திட்ட இந்தக் கடிதம் 1926ஆம் ஆண்டு, ஏப்ரல் 6ஆம் திகதி எழுதப் பட்டது.

இந்தக் கடிதத்தில் மகாத்மா காந்தி, இயேசு கிறிஸ்துவைப் பற்றி எழுதியுள்ளார். அதில் கிறிஸ்து மனித குலத்தின் மிகப்பெரிய போதகர்களில் ஒருவராகத் திகழ்ந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவில் பென்சில்வேனியா மாகாணத்தில் உள்ள ரொப்



கலெக்ஷன் என்று அழைக்கப்படுகிற வரலாற்று சிறப்பு வாய்ந்த கையெழுத்து மற்றும் ஆவணச் சேகரிப்பு நிறுவனத்திடம் இந்தக் கடிதம் தற்போது உள்ளது.

இந்தக் கடிதம் ஏலம் விடப்படுகிறது. இது 50 ஆயிரம் டொலருக்கு விற்பனை ஆகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (ப)

# சென்னையில் கமல்ஹாசன் பேசும் முதல் பொதுக்கூட்டம்

சென்னையில் மக்கள் நீதி மய்யத்தின் சார்பில் வருகிற 8ஆம் திகதி மகளிர் தினப் பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்து வருகிறார்கள். அக்கூட்டத்தில் கமல்ஹாசன் பேசவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கமல்ஹாசன் மக்கள் நீதி மய்யம் என்ற அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளார். இந்தக் கட்சியில் உறுப்பினர் சேர்க்கை, கட்சியின் கட்டமைப்புகளை உருவாக்குதல் போன்ற பணிகளில் கமல்ஹாசன் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

கமல் நியமித்த 15 பேர் கொண்ட உயர்மட்டக்குழுவினர் இதற்கான பணிகளைச் செய்து வருகிறார்கள்.

கட்சி தொடங்கிய 48 மணி நேரத்திலேயே 2 லட்சத்து ஆயிரத்து 597 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர் என கமல் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில பெண்களை அதிக அளவில் திரட்டவும் ஏற்பாடு செய்கின்



றனர். இதன் ஒரு கட்டமாக சர்வதேச மகளிர் தினத்தை பிரமாண்டமாக கொண்டாட முடிவு செய்துள்ளனர்.

இதையொட்டி வருகிற 8ஆம் திகதி சென்னை ஆழ்வார்பேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் மகளிர் தின பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்து வருகிறார்கள். கமல் கட்சி தொடங்கிய பிறகு சென்னையில் நடத்தப்படும் முதல் பொதுக் கூட்டமும் கமல் சென்னையில் பேசப் போகும் முதல் பொதுக் கூட்டமும் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# தாய்ப்பாலூட்டும் படத்தை பிரசுரித்து சர்ச்சையைக் கிளப்பிய பத்திரிகை

ஒரு மலையாள இதழ் தனது அட்டைப்படத்தில் மொடல் ஒருவர் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவது போன்ற ஒரு படத்தை பிரசுரித்துள்ளது. இது சமூக ஊடகத்தில் பெரும் விவாதத்தை எழுப்பியுள்ளது.

மலையாள மொடல் ஜிலு ஜோசப், ஒரு குழந்தைக்கு பாலூட்டுவது போல போஸ் கொடுத்து இருந்தார். இந்தப் புகைப்படம் கேரள மாநிலத்தில் பிரசுரிக்கப் படும், மலையாள இதழான கிரகலட்சுமி வார இதழில் பிரசுரமாகியிருந்தது.




அதுமட்டுமல்லாமல், அந்த அட்டைப்படத்தில், உற்றுப் பார்க்காதீர்கள், நாங்கள் தாய்ப்பால் கொடுக்கவேண்டும் என்ற வாசகம் இடம் பிடித்திருந்தது. ஒரு தாய் தனது குழந்தைக்கு தாய்ப் பால் கொடுப்பது போன்ற படம், இந்திய பத்திரிகையின் அட்டையில் இடம்பிடிப்பது இதுதான் முதல்முறை.

கிரகலட்சுமி வார இதழின் அட்டைப் படத்துக்கு ஆதரவும் எதிர்ப்பும் என இருவிதமான விமர்சனங்கள் கிடைத்துள்ளன. சமூக வலைதளத்தில் இது துணிச்சலான முயற்சி என்று ஒரு சாராரும், இது விளம்பரத்துக்காகச் செய்த தேவையில்லாத முயற்சி என்று ஒரு சாராரும் விமர்சித்து உள்ளனர்.

இந்த நிலையில் கிரகலட்சுமி பத்திரிகைக்கு எதிராக வினோத் மேத்யூ என்பவர் கேரளாவின் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (ப)

## மும்பை ரி - 20 லீக் போட்டியில் சச்சின் மகன் அர்ஜுன் விலகல்

கிரிக்கெட் ஜாம்பவான் சச்சி னின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர் மும்பை ரி-20 லீக் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம் பவான் என்றழைக்கப்படும் சச்சினின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர் இளம் வீரராக வலம் வந்து கொண்டிருக்கி றார். அவர் இடது கைப் பந்து வீச்சாளர். தொடர்ந்து முன்னேற்றம் கண்டுவரும் அர்ஜுன் தற்போது புதிய பந்து வீச்சு முறைக்கு பயிற்சி எடுத்து வருகிறார்.

இந்த நிலையில், வருகின்ற 11 முதல் 21ஆம் தகதி வரை நடைபெற உள்ள மும்பை ரி-20 லீக் போட்டியில் இருந்து அர்ஜுன் விலகியுள்ளார். அவர் புதிய



பந்து வீச்சு முறைக்கு பயிற்சி எடுத்து வருகின்றமையால் அவரால் பங் கேற்க இயலவில்லை. அவர் இன் னும் போட்டிக்கு தயாராகவில்லை. இச்சமயம் விளையாடினால் எந்த முறையில் விளையாடுவது என்ற குழப்பம் ஏற்படும்.

அர்ஜுன் தனது தந்தை சச்சினி டம் கலந்து ஆலோசனை செய்த பிறகே இந்த முடிவை எடுத்துள்ளார். போட்டிக்குத் தயாராகவில்லை என் றால் விளையாட வேண்டாம் என சச் சின் அறிவுரை வழங்கியுள்ளார்.

அர்ஜுன் டெண்டுல்கரின் இந்த முடிவு போட்டி ஒருங்கிணைப்பாளர் களுக்கு கடும் அதிருப்தியை ஏற் படுத்தியுள்ளது.

மும்பை கிரிக்கெட் சங்கம் நடத் தும் இந்த ரி-20 மும்பை லீக் தொட ருக்கான தூதராக சச்சின் டெண் டுல்கர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.




## 19 வயதில் ஆப்கன் கப்டனான ரஷித் கான்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரரான ரஷித் கான், சர்வதேச போட்டிகளில் கப்டனாக பொறுப்பேற் கும் இளம்வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணியின் முன்னணி சுழல்பந்து வீச்சாளரான ரஷித் கான் சர்வதேச ரி-20 போட்டி களில் சிறந்த பந்துவீச்சாளருக்கான பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். இவர் இந்தாண்டுக்கான ஐ.சி.சி. சிறந்த துணை வீரர் விருதும் பெற் றவர்.

இவர் கடந்த ஆண்டில் மட்டும் ஒருநாள் போட்டியில் 60 விக்கெட் டுகளை வீழ்த்தியுள்ளார். அவர் வீழ்த் திய விக்கெட்டுகளை சராசரியாக கணக்கிட்டால் போட்டிக்கு 3.8 விக் கெட்டுகளை எடுத்துள்ளார். இதுவே 2017ஆம் ஆண்டில் ஒரு பந்துவீச் சாளர் பெற்ற அதிக சராசரி ஆகும்.

இந்த நிலையில், நாளை தொடங்கவுள்ள உலகக்கோப்பைத் தகுதிச் சுற்றில் ஆப்கன் அணி விளை யாடவுள்ளது. இந்தப் போட்டியில் தற்போதைய ஆப்கானிஸ்தான் அணியின் கப்டனான அஷ்கர் ஸ்டானிக்சாய் மருத்துவ ஒய்வில் உள்ளமையால், ரஷீத் கான் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் சர்வதேச போட்டிகளில் கப்டனாகப் பொறுப்பேற்கும் முதல் இளம் வீரர் என்ற பெருமையை 19 வயதாகும் ரஷித் கான் பெற்றுள்ளார்.

## ஆசிய விளையாட்டு விழாவையொட்டி விழிப்புணர்வு வேடிக்கை ஓட்டம்

இந்தோனேஷியாவில் நடைபெற வுள்ள 18ஆவது பாலெம்போக் ஆசிய விளையாட்டு விழா 2018 தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் உத்தி யோக பூர்வ வேடிக்கை ஓட்டப் போட்டி அனுராதபுரத்தில் நேற்று நடைபெற் றது.

இதற்குச் சமாந்தரமாக பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டி, உடற்கல்வி ஆசிரியர்களுக்கான ஒலிம்பிக் பெறுமதி கல்வித் திட்டம் சார்ந்த பயிற்சி என்பனவும் நடைபெற் றன.


இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு வால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சிகளுக்கான பரிசளிப்பின்போது இலங்கைக்கான இந்தோனேஷிய தூதுவர் ஹரிமாவன் சுயிட்னோ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

500 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் இந்த வேடிக்கை ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டனர்.

சித்திரப் போட்டி மற்றும் வேடிக்கை ஓட்டப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆசிய ஒலிம்பிக் பேரவையின் பதக்கங்களும் சான்றிதழ் களும் வழங்கப்பட்டன.




## உலகக் கிண்ண உதைபந்துப் போட்டிக்கு பிரம்மாண்டமாகத் தயாராகும் மைதானம்



ரஷ்யாவில் நடைபெற உள்ள பிபா உலகக் கிண்ண உதைபந்து தொடருக்காக, பிரம்மாண்டமான முறையில் சோச்சி உதைபந்து மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்துத் தொடர் ரஷ்யாவில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரின் 6 போட்டிகள் சோச்சி மைதானத்தில் நடைபெற உள்ளதால், இந்த மைதானம், நவீன முறையில் பிரம்மாண்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்த மைதானத்தில் பிபா உதைபந்து கட்டமைப்பின் நிர்வாகத் தலைவர் கொலின் ஸ்மித் தலைமையிலான குழுவினர் மைதானத்தின் வடிவமைப்பு, கட்டுமானம், ரசிகர்கள் அம ரும் இடம், போட்டிக்களம் பற்றி ஆய்வு நடத்தினர்.

ஆய்வுக்குப் பின்னர், மைதானப் பணிகள் திருப்தி அளிக்கின் றன என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். வரும் ஜுன் 16ஆம் திகதி தொடங்க உள்ள இந்தத் தொடரில், மொத்தம் 32 அணிகள் 8 பிரிவு களாக பிரிக்கப்பட்டு விளையாட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விராட் கோஹ்லிக்கு ஆக்ரோஷமும் டோனிக்கு அமைதியும் அவசியம்

2019ஆம் ஆண்டு உலகக் கிண் ணத்தை இந்தியா வெல்ல கப்டன் கோஹ் லியின் ஆக்ரோஷமும், டோனியின் அமைதியும் அவசியம் என இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் கப்டன் கபில்தேவ் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் கேப்டன் கபில்தேவ் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

2019ஆம் ஆண்டு உலக கோப் பையை இந்தியா வெல்ல கப்டன் கோஹ் லியின் ஆக்ரோஷமும், டோனியின் அமைதியும் அவசியம். அணியில் ஒவ் வொருவரும் ஆக்ரோஷமாக இருந்தாலும் சிக்கல், அனைவரும் அமைதியாக இருந் தாலும் சிக்கல். எனவே கோஹ்லி, டோனி யைப் போல ஆக்ரோஷமும், அமைதியும் சம அளவில் இருப்பது அணிக்கு பயன் அளிக்கும்.

டெண்டுல்கர், ராகுல், சேவாக், லட்சுமணன் ஆகிய வீரர்கள் ஓய்வு பெற்ற பிறகு இந்திய அணி மீண்டும் எழுச்சி பெற்று சிறப்பாக விளையாடி வருவது




மகிழ்ச்சி அளிக்கிறது.

ரவீந்திர ஜடேஜா, அஸ்வின் ஆகிய சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களுக்கு தற்போது அணியில் இடம் அளிக்கப் படவில்லை. அதே நேரத்தில் ரிஸ்ட் ஸ்பின்னர்களும் சிறப்பாக பந்து வீசி வருகிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## ஐ.பி.எல். தொடரில் டி.ஆர்.எஸ். பயன்படுத்த பி.சி.சி.ஐ. சம்மதம்

அடுத்த மாதம் தொடங்கும் ஐ.பி.எல். ரி-20 லீக் கிரிக்கெட் தொடரில் இருந்து டி.ஆர்.எஸ். முறையைப் பயன்படுத்த பி.சி.சி.ஐ. சம்மதம் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் போட்டியில் சில நேரங்க ளில் நடுவர்கள் தவறுகள் செய்வது உண்டு. குறிப்பாக எல்.பி.டபிள்யூ. அவுட் கொடுக்கும்போது சர்ச்சையை ஏற்படுத் தும். சில முடிவுகள் ஓர் அணிக்கு சாதக மாக அமைந்துவிடும்.

இதனால் நடுவர் முடிவை எதிர்த்து முறையீடு செய்ய கிரிக்கெட் சபை டி.ஆர். எஸ். முறையை அறிமுகப்படுத்தியது. அப்போது இந்திய அணியின் கப்டனாக டோனி இருந்தார். டி.ஆர்.எஸ். ஒன்றும் கடவுள் கிடையாது. 100 வீத உண்மை யான முடிவு கிடைக்காது. இதனால் டி. ஆர்.எஸ். தேவையில்லை என்று குறிப் பிட்டிருந்தார். இதனால் இந்திய கிரிக்கெட் சபை டி.ஆர்.எஸ்.முறையை அமுல் படுத்தாமல் இருந்தது.

பின்னர் விராட் கோஹ்லி இந்திய அணியின் கப்டனாக பொறுப்பேற்றார்.




இவர் டி.ஆர்.எஸ். முறைக்கு ஆதரவாக இருந்தார். இதனால் முதன்முறையாக இந்தியா 2016ஆம் ஆண்டு இங்கிலாந் துக்கு எதிராக டி.ஆர்.எஸ். முறையை அறிமுகப்படுத்தியது. அதன்பின் இந் தியா தொடர்ந்து டி.ஆர்.எஸ். முறையைப் பயன்படுத்தி வருகிறது.

தற்போது முன்னணி ரி-20 லீக் தொடரான ஐ.பி.எல். தொடரிலும் டி.ஆர். எஸ். முறையைக் கொண்டு வர ஐ.பி.எல். நிர்வா கக் குழு முடிவு செய்தது. இதற்கு பி.சி.சி.ஐ. ஒப்புதல் அளித்துள்ளது.

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முயற்சிகள் இடம்பெற்றுவரும் நிலையில், அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரான அமைச்சர் ரவீந்திர சமரவீர இதனைக்கூறியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது வனஜீவராசிகள் மற்றும் நிலையானஅபிவிருத்திஅமைச்சராக நியமிக்கப்பட்ட ரவீந்திர சமரவீர,நேற்றுவெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள அமைச்சில் சமயவழிபாடுகளைத்தொடர்ந்து கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும், அமைச்சருமான சஜித் பிரேமதாஸ உட்பட அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், தொழிற்துறை அமைச்சருமான ஜோன் செனவிரத்னவும் இந்த நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தார்.

கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர், அமைச்சர் ரவீந்திர சமரவீரவிடம் ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப்பதிலளித்த அமைச்சர் ரவீந்திர சமரவீர, 1988ஆம் ஆண்டிலிருந்துஐக்கியதேசியக் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகிக் கட்சியின் வளர்ச்சிக்காகசெயற்பட்டுவரும் எனக்கு அதன் பிரதிபலன் இப்போதுதான் கிடைத்திருக்கிறது.

ஆனால் எனக்குப் பின்வந்த பலர் நான் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலும்கூட, அவர்கள் அமைச்சரவை அமைச்சராகப் பதவி வகித்தனர். எனவே நான் தான் ஏனையவர்களை விடவும் அதிகமான கலக்கத்தில் இருக்க வேண்டியவன்.

கட்சிக்குள் சஞ்சலமடைந்து, கலக்கத்தில் இருப்பவர்கள் தெளிவுபெற நானே சிறந்த உதாரணம். கட்சிக்குள் பிரச்சினை இல்லை என்று நான் கூறமுடியாது. கட்சிக்குள் மிகப் பெரிய மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவேண்டும் என்பதைக் கடந்த தேர்தலில் மக்கள் தெளிவுபடுத்தினார்கள்.

வரலாற்றில்மிகப்பெரியமாற்றத்தை 2015ஆம் ஆண்டில் நாங்கள் செய்திருந்தோம். அதன்படி அந்த மாற்றத்தின் பிரதிபலன்களும், எதிர்பார்ப்புக்களும் எமக்குக் கிடைக்கவில்லைஎன்றால்விலகுவதைத் தவிர வேறொன்றும் இல்லை. இதற்கமையவே அந்த மாற்றங்களை மேற்கொள்ளக் கட்சி முற்படுகிறது. அது எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுபற்றிப் பேச்சு நடத்தப் படுகிறது – என்றார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், தொழிற்துறை அமைச்சருமான ஜோன் செனவிரத்ன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ளதாகக் கூறப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாகத் தமது கட்சி இன்னும் இறுதிமுடிவுஎடுக்கவில்லை என்று கூறினார். (ஐ)

## சிரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் விடுத்துள்ளார்.

சிரியாவில் இடம்பெற்று வரும் மனிதப்படுகொலையை உடன் நிறுத்தக் கோரி ஐ.நா.வைக் கேட்கும் முகமாக, இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி யளவில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டமானது முள்ளிவாய்க்கால் பிரதான சந்திக்கு அருகில் நடைபெறவுள்ளதால், அனைவரையும் இந்தமனிதாபிமானம் மிக்க ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார். (ஐ-7)

## வடக்கு -...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டும் என சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் விருந்தோம்பல் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கு – கிழக்கில் பல்வேறு திட்டங்களில் முதலிடுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இதனைப் புலம்பெயர் தமிழர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சின் கீழுள்ள இலங்கை சுற்றுலாக் கற்கை நிறுவகத்தின் கீழ் விருந்தோம்பல் முகாமைத்துவப் பயிற்சிநெறிகள் கடந்த ஒரு மாத காலமாக யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றன.

மூன்று பிரிவுகளாக இடம்பெற்ற இந்த விருந்தோம்பல் முகாமைத்துவக் கற்கைநெறியில் 120 மாணவர்கள் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறு பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை சுற்றுலாக் கற்கை மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புத்திக்க கேவவாசம் தலைமையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று இடம்பெற்றது.

இதில் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வீ.விக்னேஸ்வரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினர்.

வடக்கிலுள்ளசுற்றுலாமையங்களைத் தொன்மை மாறாத வகையில் சீரமைப்பதற்கு தம்முடன் ஒத்துழைப்பை வழங்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சரால்நேற்றுவிடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அமைச்சர், அதற்கான சகல நிதி மற்றும் பௌதிக உதவிகளைத் தாம் மேற்கொள்வார் எனவும் வாக்குறுதி வழங்கினார்.

சுற்றுலாக் கற்கை மையத் தலைவர் சுனில் திஸநாயக்க, யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

# திருமலைப் புடைவைக் கடையில் 8 சேலைகள் பொலிஸாரால் மீட்பு

## புத்த பெருமானின் முக அமைப்பு அவற்றில் இருந்ததே காரணம்



திருமலை, மார்ச் 03

திருகோணமலையில் புடைவைக் கடையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 8 சேலைகளைப் பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளனர்.

புத்தரின் முக அமைப்பைக் கொண்டிருந்தனாலேயே அவை கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை இராஜவரோதயம் வீதியில் உள்ள புடைவைக் கடையில் புத்தரின் முக வடிவமைக் கொண்ட சேலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன என்று கடற்படைப் புலனாய்வுப் பிரிவினர் தகவல் வழங்கினர்.

அதனடிப்படையில் நேற்று வெள்ளிக்கிழமை அந்தவியாபார நிலையத்தில் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது புத்தரின் முகஅமைப்பைக் கொண்டிருந்த 8 சேலைகள் கைப்பற்றப்பட்டன. அவை சில நாள்களுக்கு முன்பு தான் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்று பொலிஸார் மேலும் கூறினர். (ஐ)

## பஸ்ஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விளக்கமறியலில் வைக்குமாறு பண்டாரவளை நீதிமன்ற நீதிபதி நுவன் குணசேகர நேற்று உத்தரவிட்டார்.

பாதுகாப்பற்ற வகையில் பயணிகள் பஸ்ஸில் கைக்குண்டை எடுத்துச்சென்று வெடிக்கச்செய்தமையால் 19 பேரைக் காயமடையச் செய்தமை மற்றும் பஸ்ஸுக்கு 50 இலட்சம் ரூபா சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவருக்கு எதிராக வழக்கு தொடரவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த நிலையில் தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையிலேயே இவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மகேந்திரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எப்படியாவது பிணை வழங்குமாறு கேட்டுள்ளார்.

அலோசியஸ்பிணைபெற்று வெளியே வந்தவுடன் ஏனைய விடயங்கள் குறித்துநடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் அதற்காகத் தலையிடுமாறும் அவர் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்என அதில்மேலும் கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை அல்லது அதற்கு அடுத்த நாள் அர்ஜுன் அலோசியஸ் பிணை பெற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## இலங்கைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மஹிந்த தலைமையிலான கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல்ல.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கு நல்லாட்சி அரசு நாட்டுக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினரைக் காட்டிக் கொடுக்கத் துணிந்ததை நாட்டு மக்கள் நன்கு உணர்ந்து, அதற்கெதிராகத் தமது எதிர்ப்பையும்கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வெளிப்படுத்தினர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் தேசிய அரசு உண்மையைக் கண்டறிந்து கடந்த கால அரசுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று நிரூபிப்பதுடன், பாதிக்கப்பட்ட தமிழ் உறவுகள் எதிர்பார்த்திருக்கும் நோக்கங்களையும் நிறைவேற்றவேண்டும் – என்றார். (ஐ)

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதற்காக இவர்கள் சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி., மஹிந்த தலைமையிலான பொது எதிரணி ஆகியவற்றுடனும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை அடுத்துப் பிரதமர்ரணிலுக்குஐ.தே.கவுக்கு உள்ளேயும் வெளியேயும் கடுமையான எதிர்ப்பு வலுத்து வருகின்றது.

பிரதமர் ரணில் ஐ.தே.கவின் தலைமைப் பதவியில் இருந்தும் விலக வேண்டும் என ஐ.தே.கவுக்குள் உள்ள இளம் நாடாளுமன்றஉறுப்பினர்கள்பலர்போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

அதேவேளை, ரணில் பிரதமர் பதவியில் இருப்பதற்குத் தகுதியற்றவர் எனவும், அவர் உடனடியாக அந்தப் பதவியில் விலக வேண்டும் எனவும்சுதந்திரக்கட்சி மற்றும் கூட்டு எதிரணியினர் தொடர்ச்சியாகக் கோஷமிட்டு வருகின்றனர்.

ஆயினும் ரணில் பிரதமர் பதவியில் இருந்தும், ஐ.தே.க. தலைவர் பதவியில் இருந்தும் விலகுவதற்குத் தொடர்ச்சியாக மறுத்து வருகின்றார்.

தனது கட்சிக்கு உள்ளேயும், ஏனைய கட்சிகளிடம் இருந்தும் எழுந்த எதிர்ப்பலைகளைச் சமாளிப்பதற்காக அவர் அண்மையில் ஐ.தே.கவின் அமைச்சரவையைமறுசீரமைத்திருந்தார். ஆயினும் அந்த மறுசீரமைப்பு போலி நாடகம் என அவரது கட்சி எம்.பிக்களே விமர்சித்திருந்தனர்.

இந்நிலையில் ரணிலுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரும் முயற்சியில் ஐ.தே.க. அதிருப்தியாளர் குழுவொன்று மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றது.

இதற்காக இந்தக் குழுவினர் ஐ.தே.கவுக்குள் மட்டுமல்லாது எதிர்க்கட்சிகளிடம் இருந்தும் ஆதரவைத் திரட்டுவதற்கான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை நடக்கும் ஐ.தே.கவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் இந்த விவகாரம் பூதாகரமாக வெடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## கூட்டணித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டமொன்று யாழ்.நாச்சிமார் கோவில் வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றிருந்தது. இந்தக் கூட்டத்துக்குக் கடந்த வருடம் கட்சியின் மாநாட்டில் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டசிவசுப்பிரமணியத்துக்குஅறிவித்தல் வழங்கப்படவில்லை.

இருந்தபோதிலும், கூட்டத்துக்குச் சென்ற கட்சியின் புதிய தலைவரை அதில் பங்கேற்பதற்குக் கட்சியின் செயலாளர் நாயகமான ஆனந்தசங்கரி அனுமதிக்கவில்லை.

இதனால் இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதன்போது ஆனந்தசங்கரி புதிய தலைவரை நோக்கி, எதற்காக நீ இங்கே வந்தாய், உனக்கு இங்கே நிற்க உரிமையில்லை என்று தகாத வார்த்தைகளால் கடுமையாகப் பேசினார் என்று கூறப்பட்டது.

இதனால் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து ஆனந்தசங்கரி புதிய தலைவரின் சேர்ட்டைப் பிடித்துத் தள்ளியுள்ளார்.

இதனையடுத்து புதிய தலைவரால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஆனந்தசங்கரிக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆனந்தசங்கரி தன்னைக் கேவலமான வார்த்தைகளால் பேசினார் எனவும், தனது சேர்ட்டைப் பிடித்து தள்ளித் தாக்க முற்பட்டார் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-7)

## பாடசாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யின் அருகாமையில் மயக்கமுற்று வீழ்ந்த அந்த மாணவி, கம்பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் மேலும் கூறினர்.

சடலம் கம்பளை மருத்துவமனையில்வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து புஸல்லாவைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம்தொடர்பில்ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்தபோதே அமைச்சர் ஜோன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான விடயத்தை ஊடகங்கள் ஊடாகவே நான் அறிந்து கொண்டேன். அப்படியொரு செயற்பாடு எமது கட்சிக்குள் இடம்பெறவில்லை. மக்களால் வழங்கப்பட்ட ஐந்து வருட ஆணையை நிறைவேற்றும் வகையிலேயே இந்த நல்லாட்சி அரசு செயற்பட்டு வருகிறது – என்றார். (ஐ-7)

# திருடர்களைப் பிடிக்க சு.கவினர் தடை

தனக்குமூன்றுமாதங்களுக்குபொலிஸ் துறை அமைச்சு பதவியை கொடுங்கள். நான்திருடர்களைபிடிக்கிறேன்எனஜனாதிபதி ஒருமுறை, அமைச்சரவையில் சொன்னார். அது நடைபெறவில்லை.

அப்போது திருடர்களைப் பிடிப்பதை பிரதமர் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி தடை செய்கிறது என மக்கள் பேசினார்கள். இப்போது பொலிஸ் துறை அமைச்சர் சாகல ரத்னாயக்க பதவி விலகிய பின், அந்த பதவியை சரத் பொன்சேகாவுக்கு கொடுக்க முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவை இன்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எதிர்க்கிறது. இதனால், இப்போது திருடர்களை பிடிப்பதை ஜனாதிபதி மைத்திரியின் கட்சி தடை செய்கிறது என மக்கள் பேசுகின்றார்கள் என்று முற்போக்கு கூட்டணித் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு மட்டக்குளிய போதி சமுத்ரா ராமவிஹாரையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபோதே அமைச்சர் மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமைச்சர்கள் ராஜித, சம்பிக்க, அர்ஜுன, பொன்சேகா ஆகியோரும் ஒருமுறை திருடர்களைப் பிடிக்க இந்த அரசு தவறிவிட்டது என்று கடுமையாக குற்றம்சாட்டி அமைச்சரவை கூட்டுப் பத்திரம் ஒன்றை அமைச்சரவையில் கொண்டு வந்தார்கள்.

ஆகவே, இன்று பொன்சேகாவுக்கு பொலிஸ் துறை அமைச்சர் பதவியை கொடுக்க முடியாவிட்டால், அதை ராஜித, சம்பிக்க, அர்ஜுன ஆகிய மூவரில் ஒருவருக்குக் கொடுங்கள். இதுவும் முடியாவிட்டால், எம்மால் திருடர்களை பிடிக்க முடியாது என ஜனாதிபதியும், பிரதமரும் இந்த நாட்டுமக்களிடம்மன்னிப்புகோரிகதையை முடிக்க வேண்டும் என குறிப்பிட்டார்.



அமைச்சர் மனோ தெரிவிப்பு

மேலும், 2015 ஆம் ஆண்டு மக்கள் தந்த ஆணையில் பல விசயங்கள் உள்ளன. நாம் கொடுத்த வாக்குறுதிகளும் பல உள்ளன. ஜனநாயகம், பொலிஸ் சுயாதீனம், நீதிமன்ற சுயாதீனம், அரசியல் தீர்வு தரும் புதிய அரமைப்பு, அரசியல் கைதிகள், காணி மீளளிப்பு, தோட்டத் தொழிலாளருக்கு மலையகத்தில் காணி, தனி வீடு மற்றும் திருடர்களை பிடிப்பது என உள்ளன.

இவற்றில் ஜனநாயகம், பொலிஸ் சுயாதீனம், நீதிமன்ற சுயாதீனம் ஆகியவை தொடர்பில் நம் முன்னேறியுள்ளோம். ஏனைய சிலவற்றில் பாதிக் கிணறு தாண்டியுள்ளோம். ஆனால், திருடர்களைப் பிடிக்க தவறிவிட்டோம்.

திருடர்களை பிடிப்பதில், அவரை இவரும், இவரை அவரும் தடுக்கிறார்கள். இரண்டும் கட்சி அரசியல்தான் காரணங்கள். ஒருதரப்பு பிடிக்க போனால், அடுத்த தரப்பு தடுப்பது இன்று ஒரே அக்கப்போராக மாறியுள்ளது.

இது ஒரு கள்ளன் - பொலிஸ் விளையாட்டு அரசு என்று மக்கள் பேசுகிறார்கள். கள்வனைப் பிடிக்க பொலிஸார் போவார்களாம். ஆனால், கள்வர்கள் பிடிபட மாட்டார்களாம். அப்புறம் அதற்கு ஒரு காரணம் சொல்வார்களாம்.

இதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் மக்களுக்கு ஒரு நம்பும்படியான உடன் தீர்வை தர வேண்டும். மக்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை யுண்டு. உண்மையான மக்கள் பிரதிநிதிகளான எங்கள் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. பிரதமரையோ, ஜனாதிபதியையோ மட்டும் நம்பி நாம் அரசியலுக்கு வரவில்லை. மக்களை நம்பியே நான் பொதுவாழ்வில் இருக்கிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் - சிங்கப்பூர் அமைச்சர் ஈஸ்வரன் சந்திப்பு: வர்த்தக, பொருளாதார தொடர்பு குறித்து வலியுறுத்தல்



கொழும்பு, மார்ச் 03

சிங்கப்பூருக்கும், இலங்கைக்கும் இடையில் இந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை அடிப்படையாக கொண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, பொருளாதார தொடர்புகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் எஸ். ஈஸ்வரன் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற பேச்சின்போது இது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சு சிங்கப்பூரின் பேஃ சீசன்ஸ் ஹோட்டலில் நேற்று நடைபெற்றுள்ளது.

இதன்போது, சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பங்களிப்பு சிங்கப்பூர் அரசின் விசேட பாராட்டைப் பெற்றுள்ளது என்றும் அமைச்சர் ஈஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பிரதிபலனாக சிங்கப்பூர் தொழில் முனைவோர் பலர் இலங்கையில் முதலீடுகளை செய்ய ஆர்வம் கொண்டுள்ளமையால் அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கான துரித நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இந்தப் பேச்சில் கவனம் செலுத்தப்பட்டது என்றும் பிரதமரின் அலுவலக ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறுமியைப் பார்ப்பதற்கு வீடுதேடிச் சென்றார் மைத்திரி







மெதிரிகிரிய பிரதேசத்திலுள்ள சிறுமி ஒருவரைப் பார்ப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரின் வீட்டுக்கு சென்றுள்ளார்.

மெதிரிகிரிய பிரதேசத்தை சேர்ந்த தினுல்யா சனாதி என்ற சிறுமியையே ஜனாதிபதி நேரில் சென்று சந்தித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மெதிரிகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

இதன்போது அந்தச் சிறுமியின் வீட்டிற்குச் சென்று அவரது நலன் விசாரிப்பதற்கும் ஜனாதிபதி மறக்கவில்லை. மிகவும் பரபரபான வேலை களிலும் மிகவும் சிரித்த முகத்துடன் இந்த சிறுமியிடம் ஜனாதிபதி உரையாடியுள்ளார்.

அண்மையில் கவுடுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் ஜனாதிபதியைப் பார்ப்பதற்காக மேடைக்கு வந்த இந்தச் சிறுமி ஜனாதிபதியின் மடியில் அமர்ந்திருந்து உரையாடிய செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்த நியையில், அந்தப் பகுதிக்கு ஜனாதிபதி வருகைத் தந்ததனை அறிந்து கொண்ட தினுல்யா, அவரைப் பார்ப்பதற்காக தனது தந்தையுடன் சென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனையடுத்த ஜனாதிபதி சிறுமியின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

(கு)

## குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை வழங்கியதாலே மோதல்; குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்கிறார் அமைச்சர் ராஜித!

குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை வழங்கியதாலே இந்த மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கும் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் கிடையாது என அமைச்சர் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் அரசின் நிலைப்பாடுகளை அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு விளக்கியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அம்பாறை சம்பவத்துடன் தொடர்புள்ள சகலரையும் கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை சிலர் வேண்டுமென்றே தூண்டி விட்டனரா என்பது குறித்தும் ஆராயப்படுகிறது.

இந்தக் கருத்துருவாக்கம் சமூக வலைத்தளங்களினூடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டில் இனவாதத்தைத் தூண்டிவிட சிலர் முயல்கின்றனர்.

அம்பாறை நிலைமை கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் இருப்போர் குறித்து ஆராயப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்..

குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை தான் இந்த பிரச்சினைக்கு காரணமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் -

சில மருத்துவர்கள் மீதும் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட் டது. தமிழ் முஸ்லிம் மருத்துவராக இருந்தால் இவ்வாறு பழி சுமத்தப்படும். ஆனால் அது பற்றி விசாரித்தபோது அது பொய்க் குற்றச்சாட்டு என்பது கண்டு பிடிக்கப்பட்டது. சுகாதார அமைச்சின் திட்டங்களைத் தான் அந்த மருத்துவர்கள் முன்னெடுத்திருந்தார்கள். இங்கும் குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரை குறித்து கூறப்படுகிறது. பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். அவ்வாறு ஏதும் மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டால் விசாரிக்கத் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை சென்ற சிறுமி மாயம்!

கொழும்பு, மார்ச் 03

காலி - கிதுலம்பிடிய பிரதேசத்தில் உள்ள சிறுவர் இல்லத்தில் இருந்து சிறுமி ஒருவர் காணாமல் போயுள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி இந்தச் சிறுவர் இல்லத்தில் இருந்து பாடசாலை சென்ற சிறுமி இதுவரை திரும்பி வரவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் ஹுங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுமியே காணாமல் போயுள்ளார்.

இந்தச் சிறுமி தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே சிறுமி திடீரென காணாமல் போயுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## இன்று சிங்கள மொழி தினம்

சிங்கள மொழி தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

1989ஆம் ஆண்டு இந்தத் தினம் முதல் முதலில் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆவணங்கள், கவிதைகள் மற்றும் மொழி ரீதியான பாண்டித்தியம் பெற்ற ஆரம்பகர்த்தாவாகிய முனிதாஸ குமாரதுங்க அவர்களின் 74 ஆவது சிரார்த்தத் தினம் நேற்று நினைவுகூரப்பட்டது.

காலனித்துவ அடிமை வாழ்க்கையிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் நோக்கில் பல்வேறு சமூக ரீதியான ஆக்கங்களை இவர் எழுதியுள்ளார். சிங்கள மொழி மேம்பாட்டிற்கு முனிதாஸ குமாரதுங்க ஆற்றிய பணி மகத்தானது. சிங்கள இலக்கியத் துறை மேம்பாட்டிற்கும் அவர் பெரும் பங்காற்றியுள்ளார்.

# தென்மராட்சி கல்வி வலய ஏழிசை மாலை நிகழ்வு





தென்மராட்சி, மார்ச் 03

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் சங்கீத பாட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெறும் ஏழிசை மாலை - சப்த சுரங்களின் சங்கமம் 22 ஆவது நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் நா.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசனும், சிறப்பு விருந்தினராகக் கலாசார மத்திய நிலையக் கலாசார உத்தியோகத்தர் மகிந்தனும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் தவில் நாதஸ்வரக் கச்சேரி, இசைக் கச்சேரி, தனி இசை ஆகிய நிகழ்வுகள் தென்மராட்சிக் கல்வி வலய சங்கீத பாட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன.

நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் சுந்தரசிவம், பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சிவநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், முன்னாள் ஆசிரியரும் சங்கீத வித்துவானுமாகிய பொன். வாமதேவன், முன்னாள் அதிபர் அ. கைலாயபிள்ளை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த ஏழிசை மாலை நிகழ்வானது சங்கீதம் மீதான இரசனையை அதிகரிப்பதற்காகக் கடந்த 2014 ஆம் ஆண்டு தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது 2018 இல் 22 ஆவது நிகழ்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அனுசரணையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-21)

# சைவத்தை மழுங்கடிப்பதற்கு திட்டமிட்டே தாக்குதல்கள்!

## உலக சைவ திருச்சபை கண்டனம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 03

வடக்கு - கிழக்கில் சைவ ஆலயங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் சைவத்தை மழுங்கடிக்கத் திட்டமிட்டே மேற்கொள்ளப்படுகின்றன என்று உலக சைவத் திருச்சபையின் தலைவர் கலாநிதி விபுலானந்தா குற்றம் சுமத்தியுள்ளார்.

சிவராத்திரி தினத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்தக் காட்டுமிராண்டித்தனமான தாக்குலைத் தமது அமைப்பு கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் மத மாற்றம் மற்றும் வன்முறைகள் மூலம் சைவம் திட்டமிட்டு மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு எமது தமிழ்ச் சமூகத்தினரும் ஒரு காரணமாக உள்ளார்கள்.

கடந்த சிவராத்திரி தினத்தில் 3 சைவ ஆலயங்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. விக்கிரகங்கள் உடைக்கப்பட்டன. இவை காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல்கள் ஆகும். இவை சைவத்தை இல்லாமல் செய்வதற்கு நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவை.

இங்கு சைவர்களுடைய சனத்தொகை வீழ்ச்சி கண்டு வருகின்றது. இஸ்லாமியர்களுடைய பெருக்கம் அதிகரிக்கின்றது. இந்த நிலை தொடருமாக இருந்தால் சைவம் இல்லாமல் போகும் நிலை ஏற்படும். சைவம் பாதுகாக்கப்படவேண்டும். சைவம் பாதுகாக்கப்படும்போது அதன் ஊடாகத் தமிழ் மொழி பாதுகாக்கப்படும்.

நாட்டில் உள்ள சமயங்களில் பௌத்தம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாமைப் போதிப்பதற்குப் போதகர்கள் உள்ளார்கள். ஆனால், சைவத்தைப் போதிப்பதற்குப் போதகர்கள் இல்லை. இங்கு அதிகளவிலான பூசகர்கள் உள்ளார்கள். அவர்களைக் குருக்களாக்க வேண்டும். அதற்கு சைவ போதகர்கள் வேண்டும். சைவத்தைப் போதிக்கும் நிலையங்கள் அமைக்க வேண்டும் - என்றார். (ஐ-7)

# ஐ.தே.க. எம்.பிக்கள் குழு திங்களன்று கூடுகின்றது

கொழும்பு, மார்ச் 03

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் திங்கட்கிழமை அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

இதன்போது பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்தும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்தும் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கையும் திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியவுடன் இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவையும் சந்தித்துப் பேசவுள்ளார். நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின்போது ரணில் இவரைச் சந்திக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## யாழ்.பல்கலைக்கழகத்தின்

# வணிகபீட மாணவர்களுக்கான கற்கை ஆரம்பம் தள்ளிவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்துக்குப் புதிதாகத் தெரிவாகிய மாணவர்களுக்கு எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவிருந்த கற்கைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கற்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும் விடுதி வசதியைப் பெற்றுக்கொண்ட புதிய மாணவர்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழுவின் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கடைசியாக கடந்த செப்ரம்பர் மாதம் இடம்பெற்றிருந்த இந்தக் கூட்டம் இன்று சனிக்கிழமை இணைத் தலைவர்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஆரம்பித்து முதன்முறையாக இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தில், கடந்த வருடம் இடம்பெற்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், இந்த வருடத்துக்கான அபிவிருத்திகள் தொடர்பாகவும், பல்வேறு காரசாரமான விவாதங்கள், விளக்கங்கள் பல துறையினராலும் முன்வைக்கப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)









இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.